# இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை

## January- December,2017



*ஏற்பாட்டாளர்கள் எதிர்நோக்கிய பல்வேறு கட்டுப்பாடுகளுக்கும் தடைகளுக்கும் மத்தியில், முல்லைத் தீவு மாவட்டத்தின் , முள்ளிவாய்க்கால் கடற்கரை அருகில் அமைந்த, புனித கத்தோலிக்கத் தேவாலயத்தில், இறுதிக்கட்டப் போரின்போது உயிரிழந்தவர்களுக்கான நினைவஞ்சலி இடம்பெறுகிறது.*

- *அனுசரணை Sri Lanka brief*

INFORM Human Rights Documentation Centre, Colombo, Sri Lanka.

இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை: January -December, 2017
© INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையம், 2018

Colombo, Sri Lanka
Blog: https://ihrdc.wordpress.com/
Email: informcolombo@gmail.com

*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990,இல் இன்ஃபோர்ம் (INFORM) நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது. உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும், அறிக்கைகளை வெளியிடுவதிலும், அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இலங்கையில் கொழும்பை மையமாகக் இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு, உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும், பிராந்திய (ஆசிய) சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

# உள்ளடக்கம்:


அ. அறிமுகம் ....4

**i. முறைமையியல் மற்றும் நோக்கம்** ....4

**ii. சூழமைவு மற்றும் நிறைவேற்றுச் சாராம்சம்** ....4

**iii. ஆறு (6) குறிப்பிடத்தக்க விடயங்கள்** ....6

*1. திரு. சதேஸ் நந்திமல் டீ சில்வா (செயலார்வலர் மற்றும் தெற்கிலிருந்து சிறைச்சாலைப் படுகொலைகளுக்கான நேரடி சாட்சி)* ....6

*2. திரு.சுஜீவ மங்கள (கொழும்பிலிருந்து தொழிற்சங்கத் தலைவர்)* ....7

*3. திரு.லக்'ஷன் டயஸ் (கொழும்பிலிருந்து உரிமைகள் வழக்கறிஞர்)* ....7

*4. திருமதி எஸ்.சந்திரலீலா (வடக்கிலிருந்து காணி உரிமைகள் செயலார்வலர்)* ....8

*5. திருமதி எம்.ஈஸ்வரி (காணாமல்போகச்செய்தோர் பிரச்சாரகர் மற்றும் வடக்கிலிருந்து காணாமல்போகச்செய்யப்பட்ட ஒருவரின் மனைவி)* ....9

*6. கிழக்கிலிருந்து உரிமைகள் செயலார்வலர் (ஆண்)* .... 10

ஆ. முக்கியமான போக்குகள் மற்றும் குறிப்பிடத்தக்க சம்பவங்கள் .... 11

**i.** வடக்கு மற்றும் கிழக்கு: தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல், தடுத்துவைத்தல்கள், புலன்விசாரணைகள் மற்றும் கண்காணிப்பு .... 11

*1. வவுனியாவில் இளைஞரினாலான முகநூல் பதிவொன்றின் மீது பொலிஸ் விசாரணை* .... 11

*2. முல்லைத்தீவு சமூக யுத்த நினைவேந்தல் ஒழுங்குமைப்பாளர் மீதான தொந்தரவு* .... 12

*3. வடக்கிலிருந்து காணாமல்போகச்செய்யப்பட்ட பெண் செயலார்வலர் ஒருவர் மீதான தாக்குதல்* .... 13

*4. வடக்கில் காணி உரிமைகள் செயலார்வலரின் காணி பறிமுதல்* .... 13

*5. இரணைதீவு மதகுருவுக்கு எதிராக பொலிஸ் அச்சுறுத்தல்கள்* .... 14

*6. போராட்டத்தில் பங்கெடுத்த உள்ளகரீதியாக இடம்பெயர்ந்துள்ளவர்களைப் புலனாய்வு அலுவலர்கள் அச்சுறுத்தினர்* .... 15

*7. மீள்குடியேற்றப்பட்ட கிராமத்திற்கு வருகைதந்த உரிமைகள் செயலார்வலரை இலங்கை விமானப்படை விசாரணை* .... 15

*8. கிழக்கின் உரிமைகள் செயலார்வலர் மீதான கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் பாலியல் தாக்குதல* .... 16

*9. வடக்கில் உரிமைகள் செயலார்வலர் மீதான கண்காணிப்பு* .... 16

*10. திருகோணமலை மாவட்ட பெண்கள் வலைப்பின்னல் மீதான திடீர் வேட்டை* .... 17

*11. மட்டக்களப்பு பெண்கள் தாபனம் மீதான பொலிஸ் மற்றும் இராணுவத் தொந்தரவு* .... 18

*12. மன்னார் சிவில் சமூகத் தலைவர் ஒருவரைப் பயங்கரவாத விசாரணை திணைக்களம் வரவழைக்கின்றது* .... 18

**ii.** ஆட்கடத்தல்கள், கைதுகள் மற்றும் அச்சுறுத்தல் ........ 19

*13. தொழிற்சங்கத் தலைவர் ஒருவரின் ஆட்கடத்தல்* ........ 19

*14. மாணவ செயலார்வலர் மீதான முயற்சிக்கப்பட்ட ஆட்கடத்தல்* ........ 20

*15. மாணவ போராட்டக்காரர்களின் கைது* ........ 21

**iii.** போராட்டங்கள் மீது தாக்குதல்கள் மற்றும் கட்டுப்பாடுகள் ........ 22

*16. நீதிமன்றக் கட்டளைகள்* ........ 22

*17. கண்ணீர்புகை, நீர் பீச்சியடித்தல் மற்றும் தாக்குதல்* ........ 23

**iv.** ஊடகங்களை, விசேடமாக தமிழ் இதழியலாளர்களை அடக்குதல் ........ 25

*18. **CID**இனால் யாழ்ப்பாணம் இதழியலாளர் விசாரிக்கப்பட்டதுடன், சிங்களத்திலான வாக்குமூலத்தில் கைசாத்திடச் செய்யப்பட்டார்* ........ 25

*19. யாழ்ப்பாணத்தில் தமிழ் வானொலி இதழியலாளர் மீது தாக்குதல* ........ 26

*20. முல்லைத்தீவில் 8 இதழியலாளர்கள் தடுத்துவைப்பு* ........ 26

*21. முல்லைத்தீவில் இதழியலாளர் மீது தாக்குதல்* ........ 26

*22. மருதங்கேணி போராட்டம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளருக்கு அச்சுறுத்தல்* ........ 26

*23. ஹம்பாந்தோட்டையில் இதழியலாளர் மீது பொலிஸ் தாக்குதல்* ........ 27

*24.* **Lanka E News** ஐயும், வேறு இணைய தளங்களையும் தடைசெய்தல் ........ 28

**v.** வழக்கறிஞர்களுக்கும், சாட்சிகளுக்கும் எதிரான அடக்குமுறைகள் ........ 28

*25. மதச் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை மீது பேசியதற்காக மனித உரிமைகள் வழக்கறிஞருக்கு அச்சுறுத்தல்கள்* ........ 28

*26. மனித உரிமைகள் வழக்கறிஞர் மீது தாக்குதல்* ........ 30

*27. சேனக பெரேரா* ........ 31

*28. சுதே் நந்திமல் டி சில்வா* ........ 32

**vi.** மனித உரிமைகள் காப்பாளர்களின் மதிப்பைக் குறைக்கும் முயற்சிகள் ........ 33

*29. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கூற்றுக்கள்* ........ 33

*30.* அரச சார்பற்ற நிறுவனத்திற்கும் *மற்றும்* **LGBTIQ** *சமூகத்திற்கும் எதிராக முன்னாள் நீதி அமைச்சர் ராஜபக்ஷவின் கூற்றுக்கள்* 34

# அ. அறிமுகம்

## i. முறைமையியல் மற்றும் நோக்கம்

2017இல் இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை தொடர்பான சில குறிப்பிடத்தக்க சம்பவங்களின் பொதுவான போக்குகளையும் மற்றும் உடனடி நிழற்படத்தையும் வழங்குவதை இந்த அறிக்கை நாடிநிற்கின்றது. அண்ணளவாக 30 தனிப்பட்ட தலைப்புக்களில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள அவை 30க்கு மேற்பட்ட சம்பவங்களை உள்ளடக்குகின்றன. 2017இல் கருத்து வேறுபாட்டினை அடக்குவதற்கு அரசாங்கம் கவனமெடுத்த முறைகளை ஆய்வதற்காக இந்தச் சம்பவங்களில் மீள-இடம்பெறுகின்ற போக்குகளையும் பகுப்பாய்வதற்கு அறிக்கை முயல்கின்றது. ஒரு புறத்தில் செயலார்வலர்களுடன் ஈடுபடுவதற்கு அரசாங்கத்தின் பலவீனமான முயற்சிகளுக்கு இடையில் பொருத்தமற்றதன்மையைக் கைப்பற்றுவதற்கு அது முயற்சிக்கின்ற அதேவேளை, ஆட்கடத்தல்கள், தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள், தடுப்புக்காவலில் வைத்தல், புலன்விசாரணைகள், கண்காணித்தல், நீதிமன்றக் கட்டளைகள் ஆகியவற்றின் ஊடாக கருத்து வேறுபாட்டினை அடக்குகின்ற தந்திரங்களைத் செயற்படுத்துகின்றது.

INFORMக்கு அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள், INFORM பணியாளரின் அவதானிப்புகள் மற்றும் அனுபவங்கள் அத்துடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்களில் அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் அத்துடன் இலங்கையிலும், அதன் மீதும் பணியாற்றுகின்ற பலதரப்பட்ட மனித உரிமைகள் தாபனங்களிலிருந்து வெளியிடப்பட்ட ஆவணங்கள் ஆகியன மீது இந்த அறிக்கை ஈர்த்தெடுக்கின்றது.

## ii. சூழமைவு மற்றும் நிறைவேற்றுச் சாராம்சம்

2017ஆம் ஆண்டு இலங்கையில் போராட்டங்களின் ஆண்டொன்றாகும். நாடு முழுவதும் கட்டாயப்படுத்தப்பட்ட காணாமல்போகச்செய்தல்கள், இராணுவ ஆக்கிரமிப்பிலான காணி மற்றும் அரசியல் கைதிகள் போன்ற யுத்தம் தொடர்பான அநீதிகளிலிருந்து, ஒப்பந்தத்திலான சரீரஉழைப்பு மற்றும் மருத்துவக் கல்வியைத் தனியார்மயப்படுத்தல் வரை பரந்த வகையைக் கொண்ட பிரச்சனைகள் குறித்து எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு அடிமட்டங்களில் கிளர்ச்சிகள் நடத்தப்பட்டன. கருத்து வேறுபாட்டின் பலதரப்பட்ட மட்டங்களின் மத்தியில், யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழர்களுக்கு நினைவேந்தல் சம்பவங்கள் யுத்தத்தினாலும், வன்முறையினாலும் மற்றும் அநீதியினாலும் பாதிக்கப்பட்ட தமிழர்களினால் அதிகரித்த எதிர்ப்பினையும் மற்றும் கீழ்ப்படியாமையையும் குறித்துக்கொண்டன. தகவலுக்கான உரிமை அதிகாரச்சட்டத்தின் அமுலாக்கம் மற்றும் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவொன்றின் நியமனம், காணாமல்போனோரின் அலுவலகமொன்றைத் தாபிப்பதற்கான சட்ட வரைச்சட்டத்தை முடிவாக்குதல் மற்றும் வடக்கில் இராணுவத்தினர் ஆக்கிரமித்திருந்த சிவிலியன் காணிகளின் சில விடுவிப்புக்கள் போன்ற நல்லாட்சி அரசாங்கத்தின் 2015 தேர்தல் வாக்குறுதிகளில் சிலவற்றைச் சாதிப்பதற்கு செய்யப்பட்ட சிறிதளவு நடவடிக்கைகளுடன் அதிகாரத்தில் சிறிசேனா-விக்கிரமசிங்க நிருவாகத்தின் மூன்றாவது வருடமாக 2017 விளங்கியது.

ஐ.நா.இன் உலகளாவிய பருவகால மதிப்பாய்வு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எதிர்ப்புகள் சிலவற்றுடன் தொடர்பானவை உட்பட எழுந்தமானவிதத்தில் வேறு பிரச்சனைகள் மீது என நடைமுறைகள் ஊடாக மனித உரிமைக் காப்பாளர்களுடனும், சிவில் சமூகத் தாபனங்களுடனும்

கலந்தாய்வையும், ஈடுபாட்டினையும் அதிகரிப்பதை அரசாங்கம் நாடி நின்றது. செயற்படும் இடத்தின் மீது மாற்றங்களுக்கு பெருமளவு கலந்தாய்வுகள் பங்களிக்கவில்லை. மீண்டும் மீண்டும் கலந்தாய்வுகளில் ஈடுபடுவதைத் தொடருகின்ற அதேவேளை, முடிவுகள் கிட்டும் வரை போராட்டங்களைத் தொடர்வதற்கு சில போராட்டக்காரர்களின் விடாப்பிடியான தன்மையினால் மனக்குறைகளைத் தீர்ப்பதற்கு உண்மையான அர்ப்பணிப்பு இல்லை என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. 16 மாதங்களுக்கு மேலாக முறைமையானதும், கணிசமானதுமான அரசாங்கப் பதிலிறுப்பு இன்றி நல்லிணக்கப் பொறிமுறைகள் மீது 2016 அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட உசாவுகைகள் செயலணியின் பெரும்பாலான முடிவுகளும், பரிந்துரைகளும் உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. முழு அளவில், முடிவுகளும் மற்றும் பரிந்துரைகளும் உதாசீனம் செய்யப்படுவதுடனும், ஏற்றுக்கொள்ளப்படாததுடனும் முற்று முழுதாக நிறைவேற்றுவதற்கு அடையாளரீதியாக குறித்துக்கொள்ளும் விதத்தில் உசாவுகைகள் தோன்றுகின்றன. அரசியலமைப்புச் சீர்திருத்தம் மீது 2016 பொதுசனப் பிரதிநிதிகள் குழுவின் முடிவுகள் ஒரு முக்கியமான புறநீங்கலாகத் தோன்றுகின்றது. இது பிரதானமாக சிவில் சமூகச் செயலார்வலர்களையும்,கல்வியியலாளர்களையும் மற்றும் வழக்கறிஞர்களையும் கொண்டிருந்ததுடன், அரசியலமைப்புச் சபையின் (பாராளுமன்றம்) துணைக் குழு மற்றும் முன்னெடுத்தல் குழு ஆகியவற்றின் அறிக்கைகளை நிர்ணயிப்பதற்கு அடிமட்டச் சனசமூகங்களுடன் உசாவுகையை நடத்தியது. எனினும், புதியதொரு அரசியலமைப்புக்கு இறுதியான வரைவொன்றை இதில் பெரும்பாலானவை செய்யுமா? என்பதற்கான எடுத்துக்காட்டு இருக்கவில்லை.

இந்தக் கலந்தாய்வுகளினதும், உசாவுகைகளினதும் வழியே கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை தொடர்ந்தது. சமயநெறி பரப்புகின்ற கிறிஸ்தவக் குழுக்கள் மீதான தாக்குதல்களுக்கு எதிராக வெளிப்படையாகப் பேசியதற்காக அப்போதைய நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் அச்சுறுத்தப்பட்ட போது நாட்டைவிட்டு தற்காலிகமாக வெளியேறுவதற்கு கொழும்பைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் வழக்கறிஞர் 'லக்ஷான் டயஸ்' நிர்ப்பந்திக்கப்பட்ட போது மனித உரிமைகள் காப்பாளர் ஒருவரின் முதலாவது உயர்வான புறவரையிலானவர் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டமையை 2017ஆம் ஆண்டு குறித்தொதுக்கிக்கொண்டது. தெற்கில் ஆட்கடத்தலின் இரு குறிப்பிடத்தக்க சம்பவங்களை 2017ஆம் ஆண்டு கண்டது: முதலாவது, ஊழியர் உரிமைகள் மீதான போராட்டமொன்றுக்கு தலைமைதாங்கிய தொழிற்சங்கத் தலைவர் ஒருவரின் ஆட்கடத்தல், இரண்டாவது, தனியார் மருத்துவக் கல்லூரியைத் தாபிப்பதற்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்த பல்கலைக்கழக மாணவர் ஒருவரின் முயற்சிக்கப்பட்ட ஆட்கடத்தல். 2017 மே மாதத்தில், 2009இல் யுத்தத்தின் கடைசிக் கட்டங்களில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூருவதற்காக மே 18 அன்று இடம்பெறவிருந்த நிகழ்ச்சியொன்றை நிறுத்துவதற்கான முயற்சியொன்றில் முல்லைத்தீவில் செயலார்வலரான கத்தோலிக்க மதகுரு ஒருவருக்கு எதிராக நீதிமன்றக் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டது. கொழும்பிலும், அதைச் சுற்றிலும் ஊழியர்களினாலும் மற்றும் மாணவ செயலார்வலர்களினாலுமான போராட்டங்களை அடக்குவதற்கு நீதிமன்றக் கட்டளைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மீதொட்டுமுல்ல குப்பை கொட்டுமிடம் சரிந்து விழுந்ததைத் தொடர்ந்து கொழும்பு குடியிருப்பாளர்களினால் அங்கு குப்பை கொட்டுவதற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்களைத் தொடர்ந்து, குப்பையை ஒழிப்பது அத்தியாவசிய சேவையொன்று எனப் பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலொன்றுக்கு ஜனாதிபதி சிறிசேன அங்கீகாரம் வழங்கியதுடன், இது தமது வீடுகளுக்கு அருகில் அபாயகரமானதும், நச்சுத்தன்மையிலானதுமான பதார்த்தங்களைக் கொட்டுவதைத் தடுப்பதற்கு முயற்சிக்கின்ற ஊறுபடத்தக்க சமூகங்களை இன்றியமையாத விதத்தில் குற்றவாளியாக்கியது.

தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல், தடுத்துவைத்தல், புலன்விசாரணை, கண்காணிப்பு போன்ற கருத்து வேறுபாட்டினை அடக்கும் பழையதும், அதிகளவு வெளிப்படையானதுமான முறைகள் தொடர்ந்த அதேவேளை, போராட்டங்களையும் மற்றும் வேறு ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்து வேறுபாட்டிலான செயற்பாடுகளையும் அர்த்தமற்ற விதத்தில் மூடிமறைப்பதற்காக நீதிமன்றக் கட்டளைகள் மீது அதிகளவில் தங்கியிருப்பதும் தொடர்ந்தது. நாட்டில் பலதரப்பட்ட உரிமைகளினதும், சமூக நீதியினதும் பிரச்சனைகள் மீது கருத்து வேறுபாட்டின் அடக்குமுறையின் போக்குகளை எடுத்துக்காட்டும் விதத்தில் நாடு முழுவதும் இடம்பெற்ற ஆறு விடயங்கள் கீழேயுள்ளன.

## iii. ஆறு (6) குறிப்பிடத்தக்க விடயங்கள்

2017இல் இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறையில் ஒவ்வொரு தருணத்தினதும் விரிவான விபரங்களைத் திரட்டுவது கஷ்டமான, இல்லையெனில் சாத்தியமற்ற பணியாக இருந்த அதேவேளை, இப்பகுதியில் முக்கியமான கரிசனைகளை எடுத்துக்காட்டும் ஆறு குறிப்பிடத்தக்க விடயங்களை INFORM உள்ளடக்கியுள்ளது. பாதிக்கப்பட்ட நபர்களுடன் நேருக்கு நேரான நேர்காணல்கள் மீதான அடிப்படையை அவற்றில் ஐந்து கொண்டுள்ளதுடன், செய்திப்பத்திரிகையொன்றுக்கு பாதிக்கப்பட்டவரினால் வழங்கப்பட்ட விரிவான தனிப்பட்ட நேர்காணலொன்று மீது ஏனையது அடிப்படையைக் கொண்டுள்ளது. ஆட்கடத்தல்கள், தாக்குதல்கள், பாலியல் தாக்குதல், துப்பாக்கிச் சூடுகள், தொலைபேசி அச்சுறுத்தல்கள், பகிரங்க இடங்களில் அச்சுறுத்தல்கள், ஆதனங்களைப் பறிமுதல் செய்தல் ஆகியவற்றின் பிரச்சனைகளை அவை முனைவுபடுத்துகின்றன. ஆறு விடயங்களுமே பின்வாழ்பவர்கள் ஆண்களும், பெண்களும் என்பதுடன், தெற்கு, வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பு போன்ற நாட்டின் வேறுபட்ட பகுதிகளைச் சேர்ந்த தமிழரும், சிங்களவரும் ஆவர். இராணுவமயமாக்கல், இராணுவம் காணிகளை ஆக்கிரமித்தல், கட்டாயப்படுத்தப்பட்ட காணாமல்போகச்செய்தல்கள், சிறைச்சாலைப் படுகொலை, மதச் சுதந்திரம் மற்றும் தொழிலாளர் உரிமைகள் போன்ற வேறுபட்ட பிரச்சனைகள் மீது பிரச்சாரம் செய்வதற்கு எதிரான அடக்குமுறைகள் ஆகியவற்றை அவை பிரதிபலிக்கின்றன.

### 1. திரு. சுதேஷ் நந்திமல் டி சில்வா (செயலார்வலர் மற்றும் தெற்கிலிருந்து சிறைச்சாலைப் படுகொலைகளுக்கான நேரடி சாட்சி)




*வலது புறத்தில் உள்ள தனது வழக்கறிஞர் சேனக பெரேராவுடன் பத்திரிகை மகாநாடொன்றில் சுதேஷ் சந்திமல் உரையாற்றுகின்றார். புகைப்பட அனுசரணை: ''அத தெரண''*

வெலிக்கடை சிறைச்சாலையில் ஒரு முன்னாள் கைதியாக விளங்கிய நந்திமல், 2012இல் படுபயங்கரமான வெலிக்கடை சிறைச்சாலைக் கலவரங்களின் ஒரு முக்கிய சாட்சியாவார். இச் சம்பவத்தில் 27 சிறைக் கைதிகள் கொல்லப்பட்டதுடன், பொலிஸ், படை வீரர்கள் மற்றும் ஒரு சிறைக்காவலர் உட்பட குறைந்தபட்சம் 40 போர் காயமடைந்தனர். அவர் சிறைக்கைதிகளின் உரிமைகளுக்கு வாய்மொழியிலாக ஆதரித்துவாதாடுபவர் என்பதுடன், சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் செயலாளரும் ஆவார். பல்-எண்ணிக்கையிலான அச்சுறுத்தல்களுக்கும், பயமுறுத்தல்களின் செயற்பாடுகளுக்கும் அவர் உட்பட்டுள்ளார். வழக்குக்காக அவர் தொடர்ந்தும் போராட்டம் நடத்தினால் அவர் பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும் என எச்சரிக்கை செய்து பயமூட்டும் அனாமதேயத் தொலைபேசி அழைப்புக்களை நந்திமல்லும், அவரது வழக்கறிஞரும் ஜுலை 11 அன்று பெற்றனர். செப்ரெம்பரில் அவர்

தங்கியிருக்கும் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும், யாரும் பொறுப்புக்கு சாட்டப்படவில்லை.

## 2. திரு.சுஜீவ மங்கள (கொழும்பிலிருந்து தொழிற்சங்கத் தலைவர்)



*அகில இலங்கை தொலைத் தொடர்பு ஊழியர் சங்கத்தின் உபதலைவர் - சுஜீவ மங்கள*

அகில இலங்கைத் தொலைதொடர்புகள் ஊழியர் சங்கத்தின் உப தலைவராக மங்கள விளங்குகின்றார். ஸ்ரீ லங்கா ரெலிகொம்முடன் இணைப்பினைக் கொண்ட மனித சக்தி ஊழியர்களினாலான வேலை நிறுத்தமொன்றை ஒழுங்குபடுத்துவதிலும், வழிநடத்துவதிலும் அவர் ஆழமாக ஈடுபட்டிருந்தார். அவர்கள் ஒரே பொறுப்புக்களைப் பங்கிடுவதன் காரணமாக முழு நேர ஊழியர்களாக சமமாக நடத்தப்படுவதற்கும், இழப்பீட்டுக்கும் அத்துடன் நன்மைகளுக்கும் கோரிக்கை விடுத்தனர். ஜனவரி 28 அன்று பின்னிரவில் கூட்டமொன்றின் பின்னர் தொழிற்சங்க அலுவலகத்தை விட்டு மங்கள வெளியேறி, தனது மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றார். ஒரு கறுத்த நிற ‘வேன்’ தன்னைப் பின்தொடர்வதையும், அது பின்னர் தன்னைக் கடந்து செல்வதையும் மங்கள அவதானித்தார். மூன்று ஆயுதபாணிகளான ஆண்கள் ‘வேனில்’ இருந்து இறங்கிவந்து, மங்களவின் கைகளைக் கட்டியும், பையொன்றினால் அவரது தலையை மூடியும் அவரை சிறைபிடித்தனர். சிறிது நேரத்தின் பின்னர் கைவிடப்பட்ட வீடொன்றில் இருப்பதை மங்கள கண்டறிந்ததுடன், அங்கு அவர் மூன்று நாட்களுக்கு சிறைவைக்கப்பட்டார். அவரிடம் வேலைநிறுத்தத்தை நிறுத்துமாறு கூறப்பட்டது. பின்னர் அவரது கண்கள் கட்டப்பட்டு, வீதியொன்றின் ஓரத்தில் விடப்பட்டார்.

## 3. திரு.லக்ஷான் டயஸ் (கொழும்பிலிருந்து உரிமைகள் வழக்கறிஞர்)



*மனித உரிமைகள் காப்பாளர் திரு. லக்ஷான் டயஸ் ஒரு கருத்தரங்கின்போது உரையாற்றுகின்றார்.- Image courtesy National Christian Evangelical Alliance*

இலங்கையில் கத்தோலிக்கம் சாராத கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் தொடர்கின்ற தாக்குதல்கள் பற்றி தேசிய தொலைக்காட்சியில் ஜூன் 14 அன்று செயலாளர்வலரும், மனித உரிமைகள் வழக்கறிஞருமான லக்ஷான் டயஸ் உரையாற்றினார். சில நாட்களின் பின்னர் இந்த

சார்த்துரைகளுக்கு எதிராக அப்போதைய நீதி, புத்த சாசன அமைச்சர் திரு.விஜேதாச ராஜபக்ஷ தாக்கிப்பேசியதுடன், தவறான தகவலை டயஸ் பரப்புவதாகக் குற்றஞ்சாட்டியதுடன், டயஸின் வழக்காடும் உரிமையைப் பறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக நேரடியாக அச்சுறுத்தினார். சட்டரீதியாக அவ்வாறு செய்வதற்கான உரிமையை அல்லது அதிகாரத்தை அமைச்சர் கொண்டிருக்கவில்லை. தனக்கும், தனது தொழிலுக்கும் உண்மையான அச்சுறுத்தல் உள்ளது என்பதை உணர்ந்த டயஸ், முன்னைய ஆட்சியின் கீழ் தனது உயிருக்கு பாரதூரமான அச்சுறுத்தல்கள் இருந்த போதும் நாட்டை விட்டு வெளியேறாத நிலையில் கூட, தற்காலிகமாக நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தள்ளப்பட்டார்.

### *4. திருமதி எஸ்.சந்திரலீலா (வடக்கிலிருந்து காணி உரிமைகள் செயலார்வலர்)*



*கேப்பாபிளவு போராட்டத்தின்போது காணி உரிமைச் செயற்பாட்டாளர் செல்வி சந்திரலீலா 'நேர்காணல் வழங்குகிறார்- Image courtesy Shiran Illanperuma.*

முல்லைத்தீவிலிருந்து அடிமட்டத்திலான செயலார்வலராகவும், ஒருங்கிணைப்பாளராகவும் சந்திரலீலா விளங்குகிறார். அவர் ஒரு முன்னாள் ஆசிரியர் என்பதுடன், கேப்பாபுலவு கிராமியப் பெண்கள் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமாவார். வடக்கில் அவர் நன்கு அறியப்பட்ட சமூகத் தலைவர் என்பதுடன், கேப்பாபுலவில் இராணுவம் ஆக்கிரமித்திருக்கும் காணிகளிலிருந்து இடம்பெயர்ந்த கிராமவாசிகளினாலான போராட்டங்களை ஒழுங்குபடுத்துவதில் முக்கியமான வகிபங்கொன்றை வகித்தார். இந்தப் போராட்டத்தின் போது அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களினால் சந்திரலீலா அடிக்கடி நேர்முகங்காணப்பட்டார். நீண்ட போராட்டத்தின் பின்னர் விமானப் படை ஆக்கிரமிப்பிலிருந்து பிலாகுடியிருப்பு கிராமம் விடுவிக்கப்பட்ட பின்னர் உடனடியாகவே, உரித்துறுதியைக் கொண்டிருந்ததும், தனக்குச் சொந்தமானதுமான கமத்தொழில் காணியொன்றின் துண்டொன்று பாதுகாக்கப்பட்ட பகுதியொன்றாக வன திணைக்களத்தினால் கோரப்படுவதை சந்திரலீலா கண்டறிந்தார். இந்தத் தீர்மானத்திற்கு முன்னர் ஒன்றில் சந்திரலீலாவுடன் ஆலோசனை நடத்தப்படவில்லை அல்லது அவருக்கு அறிவிக்கப்படவில்லை. காணியினுள் அவர் வாடகைக்கு எடுத்த வேலையாட்கள் விமானப்படை அலுவலர்களினால் உள்ளே செல்வதற்கு மறுக்கப்பட்ட போது மட்டுமே அவர் இந்தத் தீர்மானங்களைக் கண்டறிந்தார்.

## 5. திருமதி எம்.ஈஸ்வரி (காணாமல்போகச்செய்தோர் பிரச்சாரகர் மற்றும் வடக்கிலிருந்து காணாமல்போகச்செய்யப்பட்ட ஒருவரின் மனைவி)



*காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார் 150வது நாளாக தமது நீதிக்கான போராட்டத்தை முல்லைத் தீவில் முன்னெடுக்கின்றனர். Image courtesy Tamil Guardian*

இராணுவத்தினால் அழைத்துச்செல்லப்பட்ட பின்னர் ஈஸ்வரியின் கணவர் காணாமல் போகச்செய்யப்பட்டுள்ளார். அது முதல் அவரைக் கண்டறிவதற்கு மீண்டும் மீண்டும் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. காணாமல்போகச்செய்யப்பட்ட வேறு குடும்ப உறுப்பினர்களுடன் போராட்டங்களை ஈஸ்வரி ஒழுங்குபடுத்தியுள்ளார். 2017 ஓகஸ்ட் 14 அன்று அவ்வேளையில் முல்லைத்தீவில் காணாமல்போகச்செய்யப்பட்டோரின் குடும்பங்களின் 5 மாதங்களைக் கொண்ட (இப்போது 14 மாதங்களுக்கு மேல்) நீண்ட போராட்டத்தை வழிநடத்திய ஈஸ்வரி ஒரு நாள் இரவு வீடு செல்கையில் மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்களினால் அச்சுறுத்தப்பட்டார். அறிக்கைகளின் பிரகாரம், அவர் இருட்டில் கன்னத்தில் அறையப்பட்டதுடன், அவரிடம் போராட்டத்தை தொடரக்கூடாது எனக் கூறப்பட்டது. “நீ பிரச்சாரத்தை விட்டு வெளியேறினால், மற்றவர்கள் உன்னைப் பின்தொடர்வார்கள். நீ அப்படி செய்யாவிட்டால், நீ பாரதூரமான பின்விளைவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டும்” என அவரிடம் கூறப்பட்டது. தாக்குதலில் அடைந்த காயங்களுக்காக அரசாங்க வைத்தியசாலையொன்றில் சிகிச்சையைப் பெற்ற பின்னர், ஓகஸ்ட் 15 அன்று பொலிசுக்கு வாக்குமூலமொன்றை வழங்குமாறு ஈஸ்வரி பணிக்கப்பட்டார். எனினும், ஓகஸ்ட் 20 அன்று பொலிசார் ஈஸ்வரியை இரு தடவைகள் சந்தித்ததுடன், இன்னொரு வாக்குமூலத்தை பதிவுசெய்வதற்கு பொலிஸ் நிலையத்திற்கு தம்முடன் வருமாறு அவர்கள் அவரை இசையச் செய்ய முயற்சித்தனர். வழக்கறிஞர் ஒருவரின் துணையின்றி செல்வதற்கு அவர் மறுத்தார்.

## *6. கிழக்கிலிருந்து உரிமைகள் செயலார்வலர் (ஆண்)*

2017இன் பிற்பகுதியில் சொற்பொழிவொன்றில் அரசாங்கத்தை விமர்சித்த பின்னர் உரிமைகள் செயலார்வலர் ஒருவர் வீட்டுக்குப் பிரயாணம் செய்தார். பொலிஸ் அலுவலர் என வலியுறுத்திய சாதாரண உடைகளிலான தனிப்பட்டவர் ஒருவரினால் செயலார்வலர் அணுகப்பட்டு, விசாரிக்கப்பட்டார். அவரிடம் பையின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்துமாறு கேட்கப்பட்ட போது, அவரின் ஆளடையாள அட்டையைப் பார்க்காமல் பையின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்துவதற்கு செயலார்வலர் மறுத்தார். அவரை வேறு அலுவலர்கள் உடனடியாகவே சுற்றிவளைத்தனர். சிறிதளவு தொந்தரவின் பின்னர் தம்முடன் நடந்து வருமாறு செயலார்வலர் சாதாரண உடைகளினாலான அலுவலர்களினால் நிர்ப்பந்திக்கப்பட்டார். தனது நடமாடும் தொலைபேசியைப் பயன்படுத்துவதற்கு செயலார்வலர் முயற்சித்தார். ஆனால், அவரிடமிருந்து அது உடனடியாகவே அபகரிக்கப்பட்டது. பின்னர் நடமாட்டமற்ற பகுதியொன்றில் படிக்கட்டுகளில் ஏறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதுடன், அங்கு நிலத்தின் மீது அவரது பையின் உள்ளடக்கத்தை அலுவலர்கள் வெளியில் கொட்டியதுடன், அவரது உடைமைகளில் சிலவற்றையும் சேதமாக்கினர். செயலார்வலருடன் அலுவலர்கள் நிந்திக்கும் விதத்தில் பேசினர், அவரை அடித்தனர், பின்னர் அவரின் உடல் மீது தேடுதலொன்றை நடத்தினர். அதன் போது அலுவலர்கள் தனது அந்தரங்க உறுப்பைத் தொட்டதாக செயலார்வலர் வலியுறுத்துகின்றார். இது பற்றி அவர் பின்னர் பொலிசுக்கு முறைப்பாடு செய்தார்.

## ஆ. முக்கியமான போக்குகள் மற்றும் குறிப்பிடத்தக்க சம்பவங்கள்

### i. வடக்கு மற்றும் கிழக்கு: தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல், தடுத்துவைத்தல்கள், புலன்விசாரணைகள் மற்றும் கண்காணிப்பு

மிக அதிகளவு அடிக்கடியிலான கண்காணிப்புக்கும் மற்றும் அச்சுறுத்தலுக்கும் இட்டுச்செல்லும் ஆக்கிரமிப்பிலான இராணுவமயமாக்கலுடனும் அத்துடன் செயற்பாட்டுத் திட்டங்கள், வரவு-செலவுத்திட்டங்கள், பணியாளரின் தனிப்பட்ட விபரங்கள் போன்ற தகவலைச் சமா்ப்பிக்குமாறு சமூகக் குழுக்களுக்கு அரசாங்க அலுவலா்களினாலான வேண்டுகோள்களுடனும் நாட்டின் எஞ்சிய பகுதிகளை விட முன்னைய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கிலும், கிழக்கிலும் செயலாா்வலா்களினால் முகங்கொடுக்கப்பட்ட சூழ்நிலை மிகவும் அதிகளவு கஷ்டமானதாகும். 2015இல் ஐக்கிய அரசாங்கத்தின் தெரிவின் பின்னா் சூழ்நிலை தளா்ந்துள்ளது என்ற உண்மை உள்ள அதேவேளை, தொடா்ச்சியான இராணுவப் பிரசன்னமும், பொலிஸ் கண்காணிப்பும் சிவிலியன் வாழ்க்கை மீது ஊடுருவதுடன், சிவில் செயலாா்வலா்களினதும், இயக்கங்களினதும் சாதாரண செயற்பாட்டினைத் தடுப்பதுடன், ஒன்று கூடுவதற்கும், கருத்து வெளிப்பாட்டுக்கும், ஒன்றிணைவதற்கான சுதந்திரத்திற்கும் மற்றும் இரகசியத்தைப் பேணுவதற்குமான மக்களின் உரிமையைத் தடுக்கின்றன. ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறைகள் மீது பகுதியில் சுருக்கமாக வெளியிடப்பட்டுள்ளவாறு இதழியலாளா்களுக்கு எதிரான பெருமளவு மீறல்கள் வடக்கில் தான் இடம்பெற்றுள்ளன. வடக்கிலும், கிழக்கிலும் இந்தப் போக்குகளைச் சித்தரிக்கும் சில சம்பவங்கள் கீழேயுள்ளன.

#### 1. *வவுனியாவில் இளைஞரினாலான முகநூல் பதிவொன்றின் மீது பொலிஸ் விசாரணை*




*Image : Tweet by groundviews with the photograph led to the incident*

நொவம்பரில், வவுனியா மாவட்டச் செயலக அலுவலகத்தை வெளிப்படுத்தும் புகைப்படமொன்றை வட மாகாணத்தில் உள்ள வவுனியா மாவட்டத்திலிருந்து இரு இளைஞா்கள் பதிவு செய்தனா். மர நடுகை இயக்கமொன்றின் சுவரொட்டியொன்றுக்கு கவனத்தையும் அத்துடன் சுவரொட்டியின் பின்னாலுள்ள பாரிய மரமொன்று வெட்டப்பட்டுள்ளதாக தோன்றுவதையும் ஈா்த்தெடுப்பதே புகைப்படத்தின் நோக்கம் எனத் தோன்றுகின்றது. நொவம்பா் 24 அன்று, பதிவை மேலேற்றியதற்கு பொறுப்பான இரு இளைஞா்களையும் வவுனியா பொலிசாா் விசாரித்தனா். அவா்களுக்கு புரியாத மொழியொன்றான சிங்களத்தில் எழுதப்பட்ட சத்தியக்கடதாசியொன்றில் கைச்சாத்திடுமாறு இளைஞா்கள் பணிக்கப்பட்டதுடன், அவா்கள் அவா்களது தொழில்களை இழக்கக்கூடும் என்றும், அரசாங்க அலுவலகங்களை அவா்கள் புகைப்படமெடுக்க முடியாது அல்லது அவா்களது நடவடிக்கைகளை விமா்சிக்க முடியாது என்றும் அவா்களிடம் கூறப்பட்டது. பின்னா் hash tag #justaphotolkaஇன் பயன்பாட்டின் ஊடாக ‘ஒன்லைன்’ ஒற்றுமை

இயக்கமொன்றை[1] சம்பவம் தூண்டியது. நாட்டின் வேறு பகுதியில் அரசாங்க அலுவலகங்களின் புகைப்படங்களைப் பதிவேற்றிய எவரும் துன்புறுத்தப்படவில்லை. பொலிசாரினால் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவளிப்பதற்கு குறிப்பான சட்டம் அல்லது ஒழுங்குவிதி எடுத்துக்காட்டப்படவில்லை என்பதனால் சம்பவம் அபாயகரமான முன்னுதாரணமொன்றை முன்வைக்கின்றது. சகல கருத்துக்களுக்கும், நோக்கங்களுக்கும் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை தன்னிச்சையாக அடக்குவதற்கு பொலிசார் செயற்படுவதாகத் தோன்றுகின்றது.

## *2. முல்லைத்தீவு சமூக யுத்த நினைவேந்தல் ஒழுங்குமைப்பாளர் மீதான தொந்தரவு*

மே 17 அன்று இறந்தவர்களின் சமூக மூலத்திலான பெயர்களுடன் வெட்டப்பட்ட கற்களின் சேகரிப்பொன்றுக்கு அருகில், யுத்தத்தின் கடைசிக் கட்டங்களில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நினைவேந்தல் சேவையொன்றை நடத்துவதிலிருந்து ‘ஜெசூட்’ மதகுரு வண. எழில் ராஜேந்திரனையும் மற்றும் ஏனையோரையும் தடுப்பதற்காக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்திலிருந்து நீதிமன்றக் கட்டளையொன்றை முல்லைத்தீவு பொலிசார் பெற்றுக்கொண்டனர்.[2] மே 18 அன்று வண. எழிலின் சட்டபூர்வ பிரதிநிதியினால் நீதிமன்றத்தில் கட்டளைக்கு சவால்விடுக்கப்பட்டது. விசாரணையின் போது, அவதானிப்பாளர்களைப் பொலிசார் மீண்டும் மீண்டும் தடுத்ததுடன், நீதிமன்ற விசாரணைகளை ஆவணப்படுத்துவதற்கு முயன்ற இதழியலாளர்களையும் தொந்தரவு செய்தனர். நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடன் நினைவேந்தல் நிகழ்ச்சி தொடர்ந்த அதேவேளை, வண. எழிலுக்கு எதிரான தொந்தரவு தொடர்ந்தது. அவர் புரிந்துகொள்ள முடியாத மொழியொன்றான சிங்களத்தில் எழுதப்பட்ட அழைப்பாணைகளுடன் இருட்டிய பின்னர் அவரது வீட்டுக்குப் பொலிசார் வந்திறங்கினர். பின்னர் யாரேனும் எல்.ரி.ரி.ஈ. போராளிகள் உள்ளனரா? என்பதை உறுதிப்படுத்துமுகமாக, கல் மீது செதுக்கப்பட்ட பெயர்களின் முழுமையான பட்டியலொன்றுக்கு பொலிசார் வேண்டுகோள் விடுத்தனர்.



*இறந்தவர்களின் பெயர்கள் கற்களில் பொறிக்கப்பட்டுள்ளன. image courtesy- Sri Lanka brief*

யுத்தம் முடிவடைந்து எட்டு ஆண்டுகளின் பின்னர் கூட வடக்கிலும், கிழக்கிலும் சமூகத்தினால் ஒழுங்குபடுத்தப்படும் நினைவேந்தல் சேவைகளிலும், நினைவிடங்களிலும் நடைமுறையிலான

[1] http://groundviews.org/2017/12/14/justaphotolka-highlighting-and-pushing-back-against-ongoing-surveillance-in-vavuniya/

[2] https://roar.media/english/reports/reports/trials-of-memorialisation-continue-in-the-north-east/

கஷ்டத்தை சம்பவம் குறித்துக்கொள்கின்றது. அத்தகைய நினைவேந்தல் கருத்திட்டங்களின் ஒழுங்கமைப்பாளர்கள் தொடர்ச்சியான கண்காணிப்புக்கும், தொந்தரவுக்கும் தொடர்ந்துமே முகங்கொடுக்கின்றார்கள். ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) போன்ற முன்னர் தடைசெய்யப்பட்ட குழுக்களுக்கு பொது நினைவேந்தல் நிகழ்ச்சிகளை அனுமதித்த அதேவேளை அத்துமீறுகின்ற, இராணுவரீதியிலான யுத்த நினைவிடங்களுடன் வடக்கை, விசேடமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகியவற்றை அரசாங்கம் சிதறவிடுகின்றது. வடக்கிலும், கிழக்கிலும் சமூகத்தினால் வழிநடத்தப்படும் நினைவேந்தல் நிகழ்ச்சிகளின் அடக்குமுறைகள் நல்லிணக்கத்திற்கு தடையொன்றாக தொடர்ந்துமிருக்கின்றது.

### *3. வடக்கிலிருந்து காணாமலாக்கப்பட்ட பெண் செயலார்வலர் ஒருவர் மீதான தாக்குதல்*


*திருமதி மாரியா சுரேஷ் ஈஸ்வரி, photo courtesy: jdslanka.org*

முல்லைத்தீவிலிருந்து தமிழ் பெண் செயலார்வலர் ஒருவரே திருமதி மரியசுரேஷ் ஈஸ்வரி என்பதுடன், அவரது கணவர் மரியதாஸ் மரியசுரேஷ் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்ட பின்னர் காணாமலாக்கப்பட்டுள்ளார். 2017 ஓகஸ்ட் 14 அன்று அவ்வேளையில் முல்லைத்தீவில் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் 5 மாதங்களைக் கொண்ட (இப்போது 14 மாதங்களுக்கு மேல்) நீண்ட போராட்டத்தை வழிநடத்திய ஈஸ்வரி ஒரு நாள் இரவு வீடு செல்கையில் மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்களினால் அச்சுறுத்தப்பட்டார். அறிக்கைகளின் பிரகாரம், இருட்டில் அவரது கன்னத்தில் அறையப்பட்டதுடன், அவரிடம் போராட்டத்தை தொடரக்கூடாது எனக் கூறப்பட்டது. “நீ பிரச்சாரத்தை விட்டு வெளியேறினால், மற்றவர்கள் உன்னைப் பின்தொடர்வார்கள். நீ அப்படி செய்யாவிட்டால், நீ பாரதூரமான பின்விளைவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டும்” என அவரிடம் கூறப்பட்டது.

தாக்குதலில் அடைந்த காயங்களுக்காக அரசாங்க வைத்தியசாலையொன்றில் சிகிச்சையைப் பெற்ற பின்னர், ஓகஸ்ட் 15 அன்று பொலிசுக்கு வாக்குமூலமொன்றை வழங்குமாறு ஈஸ்வரி பணிக்கப்பட்டார்.[3] எனினும், ஓகஸ்ட் 20 அன்று பொலிசார் ஈஸ்வரியை இரு தடவைகள் சந்தித்ததுடன், இன்னொரு வாக்குமூலத்தை பதிவுசெய்வதற்கு பொலிஸ் நிலையத்திற்கு தம்முடன் வருமாறு அவர்கள் அவரை இசையச் செய்ய முயற்சித்தனர். வழக்கறிஞர் ஒருவரின் துணையின்றி செல்வதற்கு அவர் மறுத்தார்.

### *4. வடக்கில் காணி உரிமைகள் செயலார்வலரின் காணி பறிமுதல்*

முல்லைத்தீவிலிருந்து அடிமட்டத்திலான செயலார்வலராகவும், ஒருங்கிணைப்பாளராகவும் எஸ்.சந்திரலீலா விளங்குகிறார். அவர் ஒரு முன்னாள் ஆசிரியர் என்பதுடன், கேப்பாபுலவு கிராமியப் பெண்கள் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமாவார். வடக்கில் அவர் நன்கு அறியப்பட்ட சமூகத் தலைவர் என்பதுடன், கேப்பாபுலவில் இராணுவம் ஆக்கிரமித்திருக்கும் காணிகளிலிருந்து இடம்பெயர்ந்த கிராமவாசிகளினாலான போராட்டங்களை ஒழுங்குபடுத்துவதில் முக்கியமான வகிபங்கொன்றை வகித்தார்.[4] இந்தப் போராட்டத்தின் போது அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களினால் சந்திரலீலா அடிக்கடி நேர்முகங்காணப்பட்டார். நீண்ட போராட்டத்தின் பின்னர் விமானப் படை ஆக்கிரமிப்பிலிருந்து பிலாகுடியிருப்பு கிராமம் விடுவிக்கப்பட்ட பின்னர் உடனடியாகவே, உரித்துறுதியைக் கொண்டிருந்ததும், தனக்குச் சொந்தமானதுமான கமத்தொழில் காணியொன்றின் துண்டொன்று பாதுகாக்கப்பட்ட பகுதியொன்றாக வன திணைக்களத்தினால்

[3] http://www.jdslanka.org/index.php/news-features/human-rights/704-sri-lanka-police-continue-harassment-of-tamil-woman-activist
[4] https://roar.media/english/life/reports/long-road-home-the-lives-of-mullaitivus-displaced/

கோரப்படுவதை சந்திரலீலா கண்டறிந்தார்.[5] இந்தத் தீர்மானத்திற்கு முன்னர் ஒன்றில் சந்திரலீலாவுடன் ஆலோசனை நடத்தப்படவில்லை அல்லது அவருக்கு அறிவிக்கப்படவில்லை. காணியினுள் அவர் வாடகைக்கு எடுத்த வேலையாட்கள் விமானப்படை அலுவலர்களினால் உள்ளே செல்வதற்கு அனுமதிக்காத போது மட்டுமே அவர் இந்தத் தீர்மானத்தைக் கண்டறிந்தார்.



*காணி உரிமைக்கான போராட்டத்தில் கேப்பாப் பிலவு பெண்கள். (சந்திர லீலாவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றார்.) பெப்ரவரி 2017 Image courtesy – Tamil guardian*

இராணுவம் அத்துமீறியுள்ள காணிகளை மீளக்-கோருவதற்கான அடிமட்டப் போராட்டத்தை வழிநடத்துவதற்கும், தக்கவைப்பதற்கும் அவரது வகிபங்கின் காரணமாக இதை அரசாங்கத்தினால் பழிக்குப்பழி வாங்கும் செயற்பாடொன்றாக சந்திரலீலாவும் மற்றும் வேறு செயலார்வலர்களும் ஆணித்தரமாகச் சந்தேகிக்கின்றனர். சந்திரலீலாவின் கமத்தொழில் காணியைப் பறிமுதல் செய்த செயற்பாடானது அவரது வாழ்வாதாரத்தினதும் மற்றும் நிதிசார் பாதுகாப்பினதும் மற்றும் ஸ்திரத்தன்மையினதும் நேரடியான தாக்குதலொன்றாகும்.

## 5. இரணைதீவு மதகுருவுக்கு எதிராக பொலிஸ் அச்சுறுத்தல்கள்

1992இல், இரணைதீவின் சிறிய தீவிலிருந்து சுமார் 242 குடும்பங்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டன.[6] 2017இல், தமது வீடுகளையும் அத்துடன் தமது பாரம்பரியமான வாழ்வாதரங்களை மேற்கொண்ட காணிகளையும் அடைவதற்கான தமது தசாப்தகால நீண்ட கோரிக்கையை இந்தக் குடும்பங்கள் தொடர்ந்தன. இந்தப் போராட்டங்களின் ஆதரவாளர் ஒருவராக சமூகத் தலைவரும், இரணைமடுநகர் தேவாலயத்தின் கத்தோலிக்க திருச்சபை மதகுருவுமான வண. அருள்செல்வம் விளங்கினார். இரணைதீவின் குடியிருப்பாளர்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தொடர்ச்சியான போராட்டத்தின் 54ஆவது நாளன்று வீதித் தடையொன்றை போராட்டக்காரர்கள் உருவாக்கினார்கள்.[7] அவ்வேளையில் சமூகத்திற்கு ஆதரவளிப்பதற்காக பிரசன்னமாகியிருந்த மதகுரு பொலிஸ் அலுவலர்களினால் அணுகப்பட்டு, அச்சுறுத்தப்பட்டார்.

செயலார்வலர்களுக்கும், மதத் தலைவர்களுக்கும் எதிராக அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட வேறு பொலிஸ் மற்றும் இராணுவ அச்சுறுத்தல்களுடன் சேர்த்து இச் சம்பவத்தையிட்டு மன்னார் ஆண்டகை கத்தோலிக்கச் சபை கண்டித்தது. வடக்கிலும், கிழக்கிலும் இத்தகைய பெருமளவு சம்பவங்களில்

[5] http://www.tamilguardian.com/content/land-return-activist%E2%80%99s-field-confiscated-sri-lankan-air-force-apparent-reprisal
[6] http://www.tamilguardian.com/content/irainativu-villagers-demand-return-land-sri-lankan-navy
[7] http://www.tamilguardian.com/content/sl-police-threats-against-protesting-mannar-priest-condemned-catholic-diocese

இச் சம்பவம் ஒன்று என்பதுடன், இங்கு வன்முறை-சாராத போராட்டக்காரர்களையும் அவர்களது ஆதரவாளர்களையும் அச்சுறுத்துவதன் மூலம் தமது அதிகாரத்தை பொலிசாரும், ஆயுதப் படைகளும் துஷ்பிரயோகம் செய்வதாக அவதானிக்கப்பட்டது.

### 6. *போராட்டத்தில் பங்கெடுத்த உள்ளகரீதியாக இடம்பெயர்ந்துள்ளவர்களைப் புலனாய்வு அலுவலர்கள் அச்சுறுத்தினர்*

2017 பெப்ரவரியில், இராணுவ ஆக்கிரமிப்பின் கீழுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி போராட்டமொன்றை பிலாகுடியிருப்பு கிராமத்தின் இடம்பெயர்ந்த குடியிருப்பாளர்கள் ஆரம்பித்தனர். இதே வேளையில் வடக்கில் உள்ள வேறு சமூகங்களும் போராட்டங்களை ஆரம்பித்தன. நாடு முழுவதிலும் இருந்து வருகைதந்தந்தவர்களை தொடர்ச்சியான போராட்டங்கள் கவர்ந்ததுடன், ஒற்றுமைப் போராட்டங்களையும் தூண்டின.

யாழ்ப்பாணத்தில் அத்தகையதொரு ஒற்றுமைப் போராட்டத்தை தேசிய மீன்பிடித்தொழில் ஒருமைப்பாடு [National Fisheries Solidarity (NAFSO)] ஒழுங்குபடுத்தியது. போராட்டத்தில் கொழும்பு, திருகோணமலை மற்றும் மன்னார் ஆகியவற்றிலிருந்து வந்த வேறு செயலார்வலர்களும் பங்கெடுத்தனர். போராட்டத்தில் பங்கெடுத்ததாகக் கூறப்பட்ட குடியிருப்பாளர்களைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தோர் முகாமொன்றுக்கு புலனாய்வாளர்கள் சென்றுள்ளதாகப் போராட்டக்காரர்கள் பின்னர் அறிந்துகொண்டனர்.[8] சமூகத் தலைவர்களில் ஒருவரைத் தனிப்படுத்திய புலனாய்வாளர்கள் உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தவர்களை அச்சுறுத்தியதுடன், போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டாம் என அவர்களுக்கு அழுத்தமும் கொடுத்தனர்.

### 7. *மீள்குடியேற்றப்பட்ட கிராமத்திற்கு வருகைதந்த உரிமைகள் செயலார்வலரை இலங்கை விமானப்படை விசாரணை*



Photo: Tweet by Ruki Fernando on the incident

2017 மார்ச் 9 அன்று, ஒரு சில நாட்களுக்கு முன்னர் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட முல்லைத்தீவில் உள்ள பிலாகுடியிருப்பு கிராமத்திற்கு கொழும்பைத் தளமாகக் கொண்ட உரிமைகள் செயலார்வலர் ரூகி பெர்னாண்டோ வருகைதந்த போது, இரு சாதாரண உடைகளிலான விமானப்படை அலுவலர்களினால் அவர் விசாரிக்கப்பட்டார்.[9] இரு தனிப்பட்டவர்களும் அவரை அணுகிய போது அவர் கிராமத்தின் குடியிருப்பாளர்களுடன் பேசிக்கொண்டிருந்தார் என்பதுடன், அவர் யார் என்றும், கிராமத்திற்கு ஏன் அவர் வருகை தந்தார் என்றும் அவரிடம் அவர்கள் கேட்டனர். பின்னர் தாம் அயலில் உள்ள விமானப்படை முகாமைச் சேர்ந்தவர்கள் என தனிப்பட்டவர்கள் தெரிவித்தனர். சுமார் 8 வருடங்களாக விமானப்படையினால் கிராமம் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததுடன், சமூகத்தினால் ஒரு மாதம் நீண்ட இரவு பகல் போராட்டத்தின் பின்னர் மட்டுமே அது விடுவிக்கப்பட்டிருந்தது. பெருமளவு தடவைகள் போராட்டத்தில் பெர்னாண்டோ இணைந்திருந்ததுடன், போராட்டத்திற்கு ஆதரவாக ஊடகங்களுடன் பேசியிருந்ததுடன், எழுதியுமுள்ளார்.

[8] http://groundviews.org/2017/03/10/spiraling-incidents-of-military-intimidation-in-the-north-ruki-fernando/
[9] http://groundviews.org/2017/03/10/spiraling-incidents-of-military-intimidation-in-the-north-ruki-fernando/

## 8. கிழக்கின் உரிமைகள் செயலார்வலர் மீதான கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் பாலியல் தாக்குதல

2017 நொவம்பரில் சொற்பொழிவொன்றில் அரசாங்கத்தை விமர்சித்த பின்னர் உரிமைகள் செயலார்வலர் ஒருவர் வீட்டுக்கு பிரயாணம் செய்தார். பொலிஸ் அலுவலர் என வலியுறுத்திய சாதாரண உடைகளிலான தனிப்பட்டவர் ஒருவரினால் செயலார்வலர் அணுகப்பட்டு, விசாரிக்கப்பட்டார். அவரிடம் பையின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்துமாறு கேட்கப்பட்ட போது, பொலிஸ் அலுவலரின் ஆளடையாள அட்டையைப் பார்க்காமல் பையின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்துவதற்கு செயலார்வலர் மறுத்தார். அவரை வேறு அலுவலர்கள் உடனடியாகவே சுற்றிவளைத்தனர். சிறிதளவு தொந்தரவின் பின்னர் தம்முடன் நடந்து வருமாறு சாதாரண உடைகளினாலான அலுவலர்களினால் செயலார்வலர் நிர்ப்பந்திக்கப்பட்டார். தனது நடமாடும் தொலைபேசியை பயன்படுத்துவதற்கு செயலார்வலர் முயற்சித்தார். ஆனால், அவரிடமிருந்து அது உடனடியாகவே அபகரிக்கப்பட்டது. பின்னர் நடமாட்டமற்ற பகுதியொன்றில் படிக்கட்டுகளில் ஏறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதுடன், அங்கு நிலத்தின் மீது அவரது பையின் உள்ளடக்கத்தை அலுவலர்கள் வெளியில் கொட்டியதுடன், அவரது உடமைகளில் சிலவற்றையும் சேதமாக்கினர். செயலார்வலருடன் அலுவலர்கள் நிந்திக்கும் விதத்தில் பேசினர், அவரை அடித்தனர், பின்னர் அவர் உடல் மீது தேடுதலொன்றை நடத்தினர். அதன் போது அலுவலர்கள் தனது அந்தரங்க உறுப்பைத் தொட்டதாக செயலார்வலர் வலியுறுத்துகின்றார்.

தனது உரிமைகளை நிறைவேற்றுகின்ற ஒரு பிரசித்தமான உள்நாட்டுச் செயலார்வலரைப் பயமுறுத்துவதற்கும், அமைதியாக்குவதற்கும் பொலிசாரினால் பயன்படுத்தப்படும் கண்காணிப்பினதும், அச்சுறுத்தலினதும் மற்றும் பாலியல் வன்முறையினதும் பாரதூரமான விடயமொன்றே இந்தச் சம்பவமாகும். வடக்கிலும், கிழக்கிலும் அச்சத்தினதும், அடக்குமுறையினதும் முழுமையான சூழ்நிலைக்கு பங்களித்துள்ள கடந்த ஆட்சியின் போது இடம்பெற்றுள்ள பெருமளவு ஒத்த விடயங்களை நினைவூட்டும் கதையொன்றே இதுவாகும்.

## 9. வடக்கில் உரிமைகள் செயலார்வலர் மீதான கண்காணிப்பு

2017 மார்ச் - ஏப்ரலில், இராணுவம் குடியிருந்த தமது காணிகளை மீளளிக்குமாறு கோரி போராட்டமொன்றை மன்னாரில் உள்ள முள்ளிக்குளத்தின் குடியிருப்பாளர்கள் ஆரம்பித்திருந்தனர். ஆரம்பத்திலிருந்தே போராட்டங்காரர்களினதும் மற்றும் போராட்டத்திற்கு ஆதரவளித்தவர்களினதும் புகைப்படங்களை எடுப்பதிலிருந்து இராணுவக் கண்காணிப்புக்கு போராட்டம் உட்பட்டிருந்தது. இடம்பெயர்ந்தவர்களின் கிராமத்திற்கு அடிப்படைச் சேவைகளை நிறுத்தப் போவதாக கடற்படை அச்சுறுத்திய பின்னர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றை செயலார்வலர் ஒருவர் தாக்கல் செய்தார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கும் மற்றும் வவுனியா பிராந்திய அலுவலகத்திற்கும் தொலைபேசி அழைப்புக்கள் ஊடாகவும், புகைப்படமெடுத்தல் ஊடாகவும் கடற்படையினால் கண்காணிக்கப்படல், அத்தியாவசியச் சேவைகளை நிறுத்தப்போவதாக கடற்படையின் அச்சுறுத்தல்கள் மற்றும் குழப்பத்தினை விளைவிக்குமுகமாக பலத்த சத்தத்துடன் போராட்டக்காரர்களை கடற்படை கடந்து செல்லுதல் ஆகியன குறித்து செயலார்வலர் முறைப்பாடு செய்தார்.

இந்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து வந்த மாதங்களில், தொடர்ச்சியாக பாதுகாப்பு கண்காணிப்பு குறித்து செயலார்வலர் அறிக்கையிட்டிருந்தார்.

இரணைமடு நகரில் போராட்டங்காரர்களைப் புகைப்படமெடுத்தல் அத்துடன் அவர்களை விசாரணை செய்தல் மற்றும் புலன்விசாரணை செய்தல் ஆகியன ஊடாக கண்காணிக்கப்படுவதையும் அதே செயலார்வலர் அனுபவித்தார். இங்கு கடற்படையினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காணிகளின் உரிமையாளர்களான இன்னொரு குழுவினர் மே 1 அன்று காலவரையற்ற போராட்டமொன்றை ஆரம்பித்திருந்தனர்.

ஆண்டின் பிற்பகுதியில், பொது நிகழ்ச்சியொன்றுக்காக அதே செயலார்வலர் முன் பதிவு செய்திருந்ததுடன், இதற்காக தனது நடமாடும் தொலைபேசி இலக்கத்தையும் வழங்கியிருந்தார். பின்னர் அவரது விபரங்களைத் தருமாறு இராணுவப் புலனாய்வாளர்கள் கேட்டுக்கொண்டதாகவும், அது வழங்கப்பட்டதாகவும் முன்பதிவைச் செய்த அலுவலரினால் செயலார்வலருக்கு கூறப்பட்டது. நிகழ்ச்சி நடந்த தினத்தன்று, நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்கள் மீதான மேலும் தகவல் குறித்து நிகழ்ச்சி நடந்த இடத்தில் இருந்த சுத்திகரிப்பாளர்களிடம் இரு புலனாய்வு அலுவலர்கள் விசாரணை செய்தார்கள். நிகழ்ச்சி முழுவதும் 10-15 பாதுகாப்பு புலனாய்வு அலுவலர்கள் நிலைநிறுத்தப்பட்டிருந்ததாகவும், இது தாமாகவே சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு பங்கெடுப்பாளர்களின் திறமையைப் பாதித்ததாகவும் பங்கெடுப்பாளர்கள் தெரிவித்தனர்.

## 10. *திருகோணமலை மாவட்ட பெண்கள் வலைப்பின்னல் மீதான திடீர் வேட்டை*



*Women activists and women's organizations organized a protest condemning this incident, June, 2017. Image courtesy – Tamil guardian*

ஜூன் 25 அன்று, திருகோணமலை மாவட்ட பெண்கள் வலைப்பின்னலின் அலுவலகம் உடைக்கப்பட்டு, அங்கு திடீர் வேட்டை நடத்தப்பட்டது.[10] அனாமதேய குற்றமிழைத்தவர்களின் திடீர் வேட்டையின் பின்னர் பெருமளவு கணினிகளும், மடிக் கணினிகளும் திரிபுபடுத்தப்பட்டன. மேலதிகமாக, தாபனத்திற்குச் சொந்தமான 'ஹார்ட் டிஸ்க்' ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் அதே இரவு களவாடப்பட்டுள்ளன.

திடீர் வேட்டையின் நேரத்தில், மூதூருக்கு கிட்டிய பட்டினத்தில் மூன்று பாடசாலை சிறுமிகள் மீது சார்த்துரைக்கப்பட்ட பாலியல்வல்லுறவு குறித்த விடயமொன்றின் மீது தாபனம்

10 https://twitter.com/rukitweets/status/879264139146874880

கருமமாற்றிக்கொண்டிருந்தது.[11][12] பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதனாலும், குற்றமிழைத்ததாக சார்த்துரைக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள் என்பதனாலும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் கெடுபிடிநிலைகளை விடயம் தூண்டியிருந்தது. இந்தத் திடீர் வேட்டைக்கு பின்னால் உள்ள குற்றமிழைத்தவர்களைச் சம்பந்தப்பட்டவர்கள் இனிமேல் தான் கைது செய்ய வேண்டும் அல்லது அடையாளங்காண வேண்டும். மனித உரிமைக் காப்பாளர்கள், குறிப்பாக பெண்கள் முகங்கொடுக்கின்ற தடைகளுக்கு சம்பவம் ஓர் உதாரணமாகும்.

## 11. மட்டக்களப்பு பெண்கள் தாபனம் மீதான பொலிஸ் மற்றும் இராணுவத் தொந்தரவு

2017 மார்ச்சில், மட்டக்களப்பில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தாபனமொன்று இயக்கமொன்றை ஒழுங்குபடுத்தியதுடன், இதற்கு பொலிஸ் மற்றும் புலனாய்வு அலுவலர்கள் வருகைதந்திருந்தனர். பிரசன்னமாகியிருந்த செயலார்வலர்களை புலனாய்வு அலுவலர்கள் புகைப்படமெடுப்பதை இயக்கத்தின் பங்கெடுப்பாளர்கள் குறித்துக்கொண்டனர். அதே தினத்தன்று பெண்கள் தாபனத்திற்குச் சொந்தமான வாகனமொன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆண்களினால் பின்தொடரப்பட்டதாகச் சார்த்துரைக்கப்படுகின்றது.

ஒரு சில வாரங்களின் பின்னர், பகுதி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு அலுவலர்கள் தாபனத்திற்கு வருகைதந்து, அதன் சகல பணியாட் உறுப்பினர்கள் உட்பட தாபனத்தின் விபரங்களைத் தருமாறு கேட்டுக்கொண்டனர். அவ்வேளையில் அலுவலகத்தில் பிரசன்னமாகியிருந்த பெண்கள் தமது விபரங்களை வெளிப்படுத்துவதற்கு மறுத்ததுடன், இதனால் அடுத்த நாள் பெற்றுக்கொள்வதற்காக தகவலைத் தயாரிக்குமாறு அவர்களுக்கு அலுவலர்கள் அறிவித்தனர்.

வார இறுதியொன்றின் போது தாபனத்திற்கு இரு அலுவலர்கள் மீள-வருகைதந்தனர். எனினும், அலுவலகம் மூடப்பட்டிருந்ததினால், தாபனம் மீதான மேலும் தகவலைச் சேகரிப்பதற்காக கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்திற்கும் மற்றும் வேறு உள்ளூராட்சி அலுவலகங்களுக்கும் வருகைதந்தனர். மேலதிகமாக, ஒரு காலை வேளை பெண் அலுவலக உறுப்பினர் ஒருவரின் வீட்டுக்கும் இராணுவப் புலனாய்வாளர்கள் வருகைதந்தனர். அவர் ஏற்கனவே வேலைக்காக வீட்டை விட்டுச் சென்றிருந்தபடியினால், அவரது குடும்ப உறுப்பினர்களிடமிருந்து அவரது தொலைபேசி இலக்கங்களை அலுவலர்கள் பெற்றுக்கொண்டதுடன், அவரது நடமாட்டங்களையிட்டு விசாரிப்பதற்காக ஏழுக்கு மேற்பட்ட அழைப்புக்களையும் ஏற்படுத்தியிருந்தனர். இறுதியாக, அந்த மாலைப்பொழுது இராணுவ சோதனைச் சாவடியொன்றுக்கு வருகைதருமாறு அவரை அலுவலர்கள் கேட்டுக்கொண்டனர்.

தனக்கும், தனது குடும்பத்தினருக்கும் மேலும் தொந்தரவு ஏற்படுமோ என்ற அச்சத்தில் சோதனைச் சாவடிக்கு வருகைதருவதற்கு பெண் உடன்பட்டதுடன், இங்கு அவரது வேலை பற்றி விசாரணை செய்யப்பட்டது. இந்த கடுமையான சோதனையிலிருந்து அச்சத்தினாலும், மனவிரக்தியினாலும் நிலைகுலைந்த போன பெண் தாபனத்தில் தனது வேலையிலிருந்து விலகுவதெனத் தீர்மானித்தார்.

செயலார்வலர்களை, விசேடமாக பெண் செயலார்வலர்களை பொலிசாரும், இராணுவத்தினரும் தொந்தரவு செய்யும் பிடிவாதத்திலான தன்மையை இந்தச் சம்பவம் முனைவுபடுத்துகின்றது. இந்தத் தருணத்தில், தொந்தரவானது மிகவும் பாரதூரமாக விளங்கியதுடன், தனக்கும், தனது குடும்பத்தினருக்கும் அமைதியை உறுதிப்படுத்துமுகமாக ஊக்கத்துடன் இயங்குவதை நிறுத்துவதற்கு செயலார்வலர் ஒருவரை நிர்ப்பந்திக்கும் வகையில் மனவதிர்ச்சியையும் இது ஏற்படுத்தியுள்ளது. தனிப்பட்ட அளவொன்றின் மீது இச் சம்பவங்கள் கவலையூட்டுவதாகும். ஆனால், பாரிய அளவொன்றில், மனித உரிமைகள் குறித்து ஊக்கத்துடன் இயங்குவதற்கு எவ்வாறு முறைமையான கண்காணிப்பும், தொந்தரவும் துணைபுரிகின்றன என்பதையும், ஜனநாயக வாழ்க்கைக்கு உறுதியான சிவில் சமூகம் அவசியம் என்பதையும் அவை காட்டுகின்றன.

## 12. மன்னார் சிவில் சமூகத் தலைவர் ஒருவரைப் பயங்கரவாத விசாரணை திணைக்களம் வரவழைக்கின்றது

[11] https://twitter.com/Mari_deSilva/status/879240394864603136

[12] https://www.colombotelegraph.com/index.php/wan-wants-justice-for-sexually-abused-children-calls-for-due-process-and-justice-over-politics/

மன்னாரில் சமூகத் தாபனங்களின் சம்மேளத்தின் தலைவராக வி.எஸ்.சிவாகரன் விளங்குகின்றார். பௌத்த குடியிருப்பாளர்கள் அற்ற பகுதியொன்றான வரலாற்றுப் புகழ்வாய்ந்த திருக்கேதீஸ்வரம் இந்து ஆலயத்தின் அயல்புறத்தில் சட்டபூர்வமற்ற விதத்தில் நிருமாணிக்கப்பட்டதாகச் சார்த்துரைக்கப்பட்ட பௌத்த ஆலயமொன்றைத் திறப்பதற்காக வருகை தரவிருந்த ஜனாதிபதி சிறிசேனவின் திட்டத்திற்கு முன்னதாக அவருக்கு கடிதமொன்றை அவர் எழுதியிருந்தார்.[13] தனிப்பட்டரீதியில் சொந்தமான 10 ஏக்கர்களைக் கொண்ட காணியின் மீது பௌத்த ஆலயத்தின் சட்டபூர்வமற்ற நிருமாணம் என அவரினால் பதப்படுத்தப்பட்டுள்ள ஆலயத்திற்கு அவரது பங்கெடுப்புக்காக தனது கடிதத்தில் ஜனாதிபதியை சிவாகரன் விமர்சித்திருந்தார். மனக்குறையிலான உள்ளூர்வாசிகளின் எதிர்ப்புக்களுடன் ஆரம்ப வைபவத்தில் ஜனாதிபதியின் பங்கெடுப்பு குறித்துக்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதியின் உயிருக்கு ஏதேனும் குறிப்பான அச்சுறுத்தலை சிவாகரன் விடுக்காமலும், ஒன்றுகூடுவதற்கும், எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் தனதும், தனது சமூகத்தினதும் உரிமை மீது வேண்டி வரவழைப்பதை மட்டுமே அவர் கொண்டிருந்தாலும் செப்ரெம்பர் 29 அன்று ஜனாதிபதியின் அட்டவணைப்படுத்தப்பட்ட வருகைதரலின் பின்னர் ஒக்ரோபர் 3 அன்று கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைத் திணைக்கத்திற்கு வருகைதருமாறு அழைக்கப்பட்டிருந்தார்.[14] ஆலயத்தின் திறப்பு விழாவில் ஜனாதிபதி கலந்துகொள்ளவில்லை என்பதுடன், சுகவீனத்தின் காரணமாக கொழும்புக்கு தன்னால் பிரயாணம் செய்ய இயலாதிருப்பதாக பயங்கரவாத விசாரணை திணைக்களத்திற்கு சிவாகரன் அறிவித்திருந்தார்.[15] எனினும், சிவாகரனுக்கு இன்னொரு அழைப்பாணை வழங்கப்பட்டிருந்ததுடன், இம்முறை ஒக்ரோபர் 30 அன்று கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்திற்கு வருமாறு கேட்கப்பட்டிருந்தார்.

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள பாரம்பரியமான தமிழ்ப் பகுதிகளில் சிங்களமயத்தினதும், பௌத்தமயத்தினதும் நடைமுறையிலான நடைமுறையை மட்டுமன்றி ஆனால் தமது எதிர்ப்பிற்கு குரல் கொடுக்கும் போது உள்ளூர்வாசிகள் முகங்கொடுக்கும் கஷ்டத்தையும் சம்பவம் முனைவுபடுத்துகின்றது. குறிப்பாக மனித உரிமைகள் துஷ்பிரயோகங்களுக்கு வரலாற்றுரீதியாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தின் சம்பந்தம் எச்சரிக்கையூட்டுவதாகும். பிரஜை ஒருவராகவும், சமூகத் தலைவர் ஒருவராகவும் மனக்குறைகளுடன் ஜனாதிபதி போன்ற தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் தொடர்புகொள்வதற்கும் அத்துடன் அவசியமென்றால் எதிர்ப்பு போன்ற வன்முறைசாராத நடவடிக்கை குறித்து அச்சுறுத்துவதற்கும் சிவாகரன் போன்ற செயலார்வலர்கள் உரிமையொன்றைக் கொண்டுள்ளனர்.

## ii. ஆட்கடத்தல்கள், கைதுகள் மற்றும் அச்சுறுத்தல்

முந்திய அரசாங்கத்துடன் ஒப்பிடுகையில் செயலார்வலர்கள், எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள், இதழியலாளர்கள் ஆகியோரின் ஆட்கடத்தல்கள் மற்றும் கைதுகள் குறைவடைந்துள்ள போதிலும், 2017இல் அறிக்கையிடப்பட்ட பெருமளவு அத்தகைய சம்பவங்கள் இருந்துள்ளன.

### *13. தொழிற்சங்கத் தலைவர் ஒருவரின் ஆட்கடத்தல்*

2016 டிசம்பர் 26 அன்று நிரந்தர ஊழியர்களாக இணைத்துக் கொள்ளுமாறு கோரிக்கைவிடுத்து SLT ஹியூமன் கெப்பிட்டல் சொலியூஸன்ஸின் துணை நிறுவனமொன்றான ஸ்ரீ லங்கா ரெலிகொம்மினால் (இதன் தலைவர் ஜனாதிபதி சிறிசேனவின் சகோதரர் ஆவார்) தொழிலுக்கமர்த்தப்பட்ட 800க்கு மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்கள் வேலைநிறுத்தமொன்றை ஆரம்பித்தனர். முழுநேர ஊழியர்களைப் போல அதேவேலையை தாமும் செய்வதாகவும், ஆனால் மிகவும் குறைந்தளவு நன்மைகளும், நிதிசார் பாதுகாப்புமே கிட்டுவதாகவும் ஊழியர்கள் வலியுறுத்துகின்றனர். 2017இலும் போராட்டம்

[13] http://www.tamilguardian.com/content/mannar-civil-society-slam-sri-lankan-presidents-plan-attend-opening-illegally-constructed
[14] http://www.tamilguardian.com/content/terrorism-investigation-department-summon-mannar-civil-society-leader-over-planned-protest
[15] http://www.tamilguardian.com/content/terrorism-investigation-department-reissue-summons-mannar-civil-society-leader

தொடர்ந்ததுடன், தொழிற்சங்கங்கள், மாணவர்கள் மற்றும் வேறு சிவில் சமூகச் செயலார்வலர்கள் ஆகியோரிடமிருந்து கிடைத்த ஆதரவின் ஊடாக வேகத்தையும், தீவிரத்தையும் ஈட்டிக்கொண்டது.

இந்தப் போராட்டத்தின் உச்சநிலையாக, 2017 ஜனவரி 28 அன்று நள்ளிரவுக்குப் பின்னர் தனது மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குச் சென்ற வேளை அகில இலங்கை தொலைதொடர்புகள் ஊழியர் சங்கத்தின் [All Ceylon Telecommunications Employees Union (ACTEU)] உப தலைவர் சுஜீவ மங்கள ஆட்கடத்தப்பட்டார். தன்னை முந்துவதற்கு முன்னதாக ‘வேன்’ ஒன்று தன்னைத் தொடர்ந்ததாகவும், இத் தருணத்தில் கைத்துப்பாக்கிகளுடன் மூன்று முகமூடி அணிந்த ஆண்கள் ‘வேனுக்குள்’ தன்னைத் தள்ளியதாகவும் மங்கள சார்த்துரைக்கின்றார்.[16] மங்களவின் கைகள் பின்புறமாக கட்டப்பட்டதுடன், அவரது தலையின் மேலாக பை ஒன்றினால் கண்கள் மூடப்பட்டன. அண்ணளவாக மூன்று மணித்தியால பிரயாணத்தின் பின்னர், அறையொன்றுக்கு தன்னைக் கூட்டிச் சென்றதாகவும், அங்கு மூன்று நாட்களுக்கு சிறைவைக்கப்பட்டதாகவும் மங்கள வலியுறுத்துகின்றார். தடுத்துவைக்கப்பட்டிருந்த வேளை அவர் சித்திரவதை செய்யப்படாத அதேவேளை, வழிநடத்துவதில் அவர் வகிபங்கினை ஆற்றிய வேலை நிறுத்தத்தை கைவிடுமாறு அவருக்கு ஆட்கடத்தியவர்களில் ஒருவர் கூறியதாக மங்கள வலியுறுத்துகின்றார். பின்னர், பெப்ரவரி 1 அன்று இங்கிரியவில் வீதியொன்றின் ஓரத்தில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் மங்கள கண்டுபிடிக்கப்பட்டார்.

சிறிசேன-விக்ரமசிங்க நிருவாகம் தெரிவு செய்யப்பட்டதிலிருந்து தெற்கில் தொழிற்சங்கச் செயற்பாடு தொடர்பாக முதலாவதாக பதிவுசெய்யப்பட்ட ஆட்கடத்தல்களில் ஒன்றாக இந்தச் சம்பவம் விளங்குகின்றது. முன்னைய தசாப்தங்களில், குறிப்பாக ஐ.தே.க. ஜனாதிபதிகள் ஜே.ஆர்.ஜயவர்தன மற்றும் ரணசிங்க பிரேமதாச ஆகியோரின் கீழ் ஜே.வி.பி. கிளர்ச்சிகளின் போது தொழிற்சங்கவாதிகளின் மிருகத்தனமான அடக்குமுறையை நினைவுபடுத்தும் எச்சரிக்கையூட்டும் முன்னுதாரணத்தை இது முன்வைக்கின்றது.

அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளாதிருப்பதும், விசாரணை செய்யாதிருப்பதும் இந்த அரசாங்கத்தின் கீழ் ஆட்கடத்தல்களில் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து பொறுப்புக்கூறுவது நழுவப்படுகின்றது என்பதுமே கருத்தாக விளங்குகின்றது. வலிந்து காணாமல்போகச்செய்தல்களிலிருந்து சகல மக்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒப்பந்தத்தை அது ஏற்றுக்கொண்ட போதிலும், அத்துடன் காணாமல்போனோர் அலுவலகத்தை திறந்துள்ள போதிலும் வலிந்து காணாமல்போகச்செய்தல்களைத் தணிப்பதற்கும், தடுப்பதற்கும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மீது இந்தச் சம்பவம் சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றது.

### *14. மாணவ செயலார்வலர் மீதான முயற்சிக்கப்பட்ட ஆட்கடத்தல்*

ஜூலை 21 அன்று, மருத்துவ மாணவர் செயற்குழுவின் கூட்ட அழைப்பாளரான ரயான் ஜயலத்தை ஆட்கடத்துவதற்கும், கைது செய்வதற்கும் வெள்ளை ‘வேன்’ ஒன்றில் சாதாரண உடையில் வந்த பொலிஸ் அலுவலர்கள் முயற்சித்துள்ளனர்.[17] அவ்வேளையில் தென் ஆசிய தொழில்நுட்ப, மருத்துவ நிறுவனம் (SAITM), என அறியப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்து துண்டுப்பிரசுரங்களை ஜயலத்தும், வேறு மாணவர்களும் கையளித்துக்கொண்டிருந்தனர். தமது ‘வேனுக்குள்’ ஜயலத்தை தூக்கிப்போடுவதற்கு சாதாரண உடைகளில் இருந்த பொலிஸார் முயற்சித்த போது அவர் மயிரிழையால் தப்பித்துக்கொண்டார்.

[16] http://www.jdslanka.org/index.php/news-features/politics-a-current-affairs/662-armed-abductors-threaten-trade-union-leader-to-give-up-strike-action
[17] http://www.sundaytimes.lk/article/1028077/protest-over-alleged-attempt-to-abduct-student-leader



*ஆட்கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வேன்,அநுசரணை- Sri Lanka mirror*

கொழும்பில் ஐக்கிய நாடுகள் தலைமை அலுவலகத்திற்கு வெளியே மாணவர் போராட்டங்களினால் இந்தச் சம்பவம் பின்தொடரப்பட்டது.[18] இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மனுவொன்றைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனம் சமர்ப்பித்த அதேவேளை, தேசிய தொழிற்சங்க நிலையத்தின் தலைவர் கே.டி.லால்காந்த பொலிஸ் அலுவலர்களின் நடத்தையைக் கண்டித்தார்.[19]

சுஜீவ மங்களவின் ஆட்கடத்தல் போலன்றி, ஜயலத்தின் முயற்சிக்கப்பட்ட ஆட்கடத்தல் மீது பகிரங்க அறிக்கைகளை உயர் வரிசையிலான அமைச்சர்கள் உட்பட ஒரு தொகையிலான அரசாங்க அதிகாரிகள் விடுத்தனர். முயற்சிக்கப்பட்ட ஆட்கடத்தலை நிதி, வெகுஜன ஊடக அமைச்சர் மங்கள் சமரவீர கண்டித்ததுடன், பிரச்சனை குறித்து விசாரிக்குமாறு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு உத்தரவிட்டார்.[20] எனினும், செயற்பாட்டில் அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டுவதை சமரவீர தவிர்த்துக்கொண்டதுடன், பதிலாக தேசிய அரசாங்கத்தைக் ”கறை”படுத்துவதற்கான “சதி” என சம்பவம் குறித்து கருத்துவெளியிட்டார். அடக்குமுறையிலான தந்திரங்களை நாடுவதாக அரசாங்கத்தைப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றஞ்சாட்டிய அதேவேளை, தமது சட்டபூர்வ வரைச்சட்டத்திற்கு வெளியே செயற்படுவதற்காக பொலிசாரை ஐ.தே.க. பொதுச் செயலாளர் கபீர் ஹஷீம் கண்டித்தார்.

### *15. மாணவ போராட்டக்காரர்களின் கைது*

பல்கலைக்கழக மாணவர்களினால் வழிநடத்தப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரிக்கு (SAITM) எதிரான போராட்டமே 2017இல் மிகவும் பரந்தரீதியில் அறிக்கையிடப்பட்ட போராட்டமாகும். கொழும்பில், வன்முறை சாராததாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் கண்ணீர் புகைக்குண்டு, நீர் பீச்சியடித்தல் மற்றும் கட்டுப்பாட்டிலான நீதிமன்றக் கட்டளைகள் ஆகியன உட்பட பொலிஸிடமிருந்து மிதமிஞ்சிய அழுத்தத்தை அடிக்கடி சந்தித்தது. பெருமளவு விடயங்களில், மாணவ செயலார்வலர்களும், போராட்டக்காரர்களும் கைது செய்யப்பட்டனர்.

[18] http://www.sundaytimes.lk/article/1028077/protest-over-alleged-attempt-to-abduct-student-leader
[19] http://www.hirunews.lk/166456/two-ministers-accuse-police-for-their-attempt-to-abduct-convener-medical-faculty-student-activists
[20] http://www.asianmirror.lk/news/item/24591-mangala-says-white-van-abduction-a-conspiracy-promises-police-action

உள்ளூர் ஊடகங்களிலிருந்து பெறப்பட்ட SAITM எதிர்ப்புப் போராட்டங்களின் கைதுகளின் முழுமைப்படுத்தப்படாத பட்டியலொன்று பின்வருமாறு:

- ❖ பெப்ரவரி 2 அன்று, நீதிமன்றக் கட்டளையொன்றுக்கு கீழ்ப்படிய மறுத்து போராட்டம் நடத்தியமைக்காக 21 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். லோட்டஸ் சுற்று வளைவில் அவர்களது போராட்டம் கண்ணீர் புகையினாலும், நீர் பீச்சியடித்தலினாலும் கலைக்கப்பட்டது.[21]
- ❖ பெப்ரவரி 15 அன்று, போராட்டம் ஒன்றின் போது நீதிமன்றக் கட்டளைகளை மீறியமைக்காகவும், வீதிகளைத் தடைசெய்தமைக்காகவும் பல்கலைக்கழகங்களிடையிலான மாணவர் சம்மேளனத்தின் [Inter University Student Federation (IUSF)] கூட்ட அழைப்பாளர் லாஹிரு வீரசேகர மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பிக்கு சம்மேளனத்தின் [Inter University Bhikku Federation (IUBF)] கூட்ட அழைப்பாளர் வண. தம்பிட்டியே சுகத்தானந்த ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.[22]
- ❖ மே 17 அன்று, போராட்டமொன்றில் சார்த்துரைக்கப்பட்ட சட்டபூர்வமற்ற நடத்தைக்காகவும் அத்துடன் நீதிமன்றக் கட்டளையை மீறி போராட்டம் நடத்தியதற்காகவும் பௌத்த மதகுரு ஒருவர் உட்பட எட்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.[23] கலகம் அடக்கும் பொலிசாரின் கண்ணீர்ப் புகையினதும், தாக்குதல்களினதும் பின்னர் குறைந்தபட்சம் 17 மாணவர்கள் காயமடைந்தனர்.[24]
- ❖ ஜூன் 21 அன்று, போராட்டமொன்றின் அங்கமாக சுகாதார அமைச்சினுள் பிரவேசித்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் அங்கு குடியிருந்தனர். விசேட திடீர் வேட்டைப் படை உட்பட கலகம் அடக்கும் பொலிஸ் பணிக்கமர்த்தப்பட்டு, மாணவர்களைக் கலைந்துபோகச் செய்வதற்காக குண்டாந்தடி பிரயோகமும், கண்ணீர் புகைக் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. மோதலில் 84 முதல் 96 மாணவர்கள் காயமடைந்ததுடன், அவர்கள் சகலரும் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.[25][26] குறைந்தபட்சம் இரு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.
- ❖ ஜூன் 23 அன்று, சுகாதார அமைச்சினுள் ஜூன் 21 அன்று பலாத்காரமாகப் பிரவேசிப்பதற்கு ஒழுங்குபடுத்தியமை தொடர்பில் IUSF கூட்ட அழைப்பாளர் லாஹிரு வீரசேகர, IUBF கூட்ட அழைப்பாளர் தம்பிட்டியே சுகத்தானந்த மற்றும் மாணவர் செயலார்வலர் பைஸ்டீன் பைஸான் மொஹமட் ஆகியோர் கைது செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது.[27]
- ❖ ஒக்ரோபர் 12 அன்று, IUSF கூட்ட அழைப்பாளர் லாஹிரு வீரசேகர மற்றும் ஒரு பௌத்த மதகுரு ஆகியோர் ஒக்ரோபர் 10 அன்று நடைபெற்ற போராட்டம் தொடர்பில் கைது செய்யப்பட்டனர்.[28]

## iii. போராட்டங்கள் மீது தாக்குதல்கள் மற்றும் கட்டுப்பாடுகள்

### *16. நீதிமன்றக் கட்டளைகள்*

கண்காணித்தல், அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள், கைதுகள், ஆட்கடத்தல்கள் போன்றவற்றின் உபயோகத்தின் ஊடாக 2017இல் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறையின் வெளிப்படையான முறைகள் தொடர்ந்த அதேவேளை, மனித உரிமைகள் குறித்து ஊக்கத்துடன் இயங்குதலை அடக்குவதற்காக நீதிமன்றக் கட்டளைகள் போன்ற சட்டபூர்வமான பொறிமுறைகளை அரசாங்கம் அதிகரித்தளவில் நாடியுள்ளது.

---

21 http://www.dailymirror.lk/123190/-Update-students-arrested-over-protest
22 http://www.adaderana.lk/news/45968/lahiru-weerasekara-and-ven-tampitiye-sugatananda-thera-remanded-
23 http://www.hirunews.lk/161563/eight-university-students-saitm-protest-arrested-five-policemen-hospitalized
24 http://colombogazette.com/2017/05/17/police-fire-tear-gas-to-disperse-anti-saitm-protest/
25 http://www.sundaytimes.lk/article/1024057/84-students-injured-as-police-fire-tear-gas-baton-charged-at-health-ministry
26 http://www.dailynews.lk/2017/06/27/local/120175/storming-health-ministry-two-more-suspects-arrested
27 http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=167154
28 http://colombogazette.com/2017/10/12/iusf-convener-arrested-and-remanded-over-protest/

வடக்கிலும், தெற்கிலும் பெருமளவு விடயங்களில் ஒன்றுகூடுவதற்கும், போராட்டம் நடத்துவதற்கான உரிமையை மறுப்பதற்கு நீதிமன்றக் கட்டளைகள் பயன்படுத்தப்பட்டன. இதற்கு அத்தகைய போராட்டங்கள் பொதுமக்களுக்கு தொந்தரவை விளைவிக்கின்றன என்ற காரணம் கூறப்பட்டது. இந்தக் கட்டளைகளை மீறுவதற்கு தெரிவுசெய்த போராட்டக்காரர்கள் அடிக்கடி கண்ணீர் புகை மற்றும் நீர் பீச்சியடித்தல் தாக்குதல்கள் ஆகியன உட்பட மிதமிஞ்சிய பொலிஸ் அழுத்தத்தைச் சந்தித்தனர். பல்கலைக்கழக மாணவர்களினால் வழிநடத்தப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான போராட்டங்கள் போன்ற சில போராட்டங்களின் விடயத்தில் நீதிமன்றக் கட்டளைகளின் மீறல் முன்னணிவாய்ந்த சாக்குபோக்காகத் தோன்றுவதுடன், இதன் மூலம் ஏற்பாட்டாளர்களும், மாணவத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். மாணவப் போராட்டக்காரர்களின் கைது மீதான பிரிவில் இந்தச் சம்பவங்களின் பெரும்பாலானவை முனைவுபடுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில், மே 17 அன்று ஜெசூட் மதகுரு ஒருவரினால் ஒழுங்குசெய்யப்பட்ட சமூக யுத்த நினைவேந்தல் நிகழ்ச்சி இடம்பெறுவதைத் தடுக்குமுகமாக நீதிமன்றக் கட்டளையொன்றைப் பொலிஸ் பெற்றுக்கொண்டது. கட்டளை பின்னர் சவால் விடுக்கப்பட்டு, சிறிதளவு திருத்தப்பட்ட போதிலும் ஒழுங்கமைப்பாளர்களைத் தொந்தரவு செய்வதற்கும், அச்சுறுத்துவதற்கும் அதிகாரச் சட்டம் செயற்பட்டது.

### *17. கண்ணீர்புகை, நீர் பீச்சியடித்தல் மற்றும் தாக்குதல்*

தனியார் மருத்துவக் கல்லூரியைத் தாபிப்பதற்கு எதிராகப் பல்கலைக்கழக மாணவர்களின் கிரமமான பெரும் போராட்டத்தை 2017 கண்டது. வாகனப் போக்குவரத்தை தடுத்தல் மற்றும் பொதுமக்களுக்கு தொந்தரவை விளைவித்தல் என ஊடகங்களில் இந்தப் பெரும்பாலான போராட்டங்கள் குற்றஞ்சாட்டப்பட்டன. எனினும், போராட்டக்காரர்களை ஒழுங்குபடுத்துவதற்கும், கலைந்து போகச்செய்வதற்கும் கண்ணீர் புகையுடனும், நீர் பீச்சியடித்தலுடனும் மற்றும் உடல்ரீதியிலான தாக்குதல்களுடனும் பொலிசாரின் பதிலிறுப்பு மிதமிஞ்சியதாகும்.



*மாணவர்களின் போராட்டத்திற்கு எதிராக கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் பொலிசார் கண்ணீர் புகையை ஏவினார்கள், அநுசரணை Daily mirror*

உள்ளூர் ஊடகங்களினால் அறிக்கையிடப்பட்டவாறு மிதமிஞ்சிய பொலிஸ் அதிகாரத்தின் சில சம்பவங்களின் பட்டியலொன்று பின்வருமாறு:

- ❖ ஜனவரி 19 அன்று, கொள்ளுப்பிட்டியில் மாணவப் போராட்டக்காரர்களை நோக்கி பொலிசார் கண்ணீர் புகையை ஏவினார்கள்.[29]

[29] https://www.newsfirst.lk/2017/01/160101/

❖ பெப்ரவரி 1 அன்று, தேசிய தொழிற்சங்க நிலையத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட போராட்டமொன்றுக்கு எதிராக பொலிசார் கண்ணீர் புகையையும், நீர் பீச்சியடித்தலையும் மேற்கொண்டனர்.[30] கைவசமிருந்த நீதிமன்றக் கட்டளையுடன் ஜனாதிபதி செயலகத்தை அணுகுவதிலிருந்து போராட்டக்காரர்களை நிறுத்துவதற்கு பொலிஸ் முயற்சித்தது. எனினும், தடையரண்களை மாணவர்கள் உடைத்தெறிந்ததுடன், அத் தருணத்தில் பொலிசார் கண்ணீர் புகையையும், நீர் பீச்சியடித்தலையும் மேற்கொண்டனர்.

❖ பெப்ரவரி 2 அன்று, பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் பொதுக் கூட்டங்களையும், போராட்டத்தையும் தடைசெய்து நீதிமன்றக் கட்டளையொன்றை மீறி ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு கொழும்பு மருத்துவப் பீடத்திலிருந்து எதிர்ப்புப் பேரணியை மருத்துவப் பீட மாணவ செயலார்வலர்கள் குழுவைச் சேர்ந்த போராட்டக்காரர்கள் ஆரம்பித்தார்கள்.[31] போராட்டக்காரர்களைக் கலைந்து போகச்செய்வதற்காக பொலிசார் கண்ணீர் புகையையும், நீர் பீச்சியடித்தலையும் மேற்கொண்டார்கள்.

❖ மார்ச் 13 அன்று, லோட்டஸ் சுற்று வளைவில் IUSFஇனால் ஒழுங்குசெய்யப்பட்ட போராட்டமொன்றின் மீது பொலிசாரினால் கண்ணீர் புகையும், நீர் பீச்சியடித்தலும் மேற்கொள்ளப்பட்டது.[32]

❖ மே 18 அன்று, நீதிமன்றக் கட்டளையொன்றை மீறி, பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவுக்கு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து பேரணியாகச் செல்வதை IUSF மேடையேற்றியது.[33] பின்னர் பொலிசாரினால் மாணவர்கள் தடுக்கப்பட்டு, கண்ணீர் புகை மேற்கொண்டு அவர்களைக் கலைந்து போகச்செய்வதற்கு பொலிசாரினால் முயற்சிக்கப்பட்டது. பெருமளவு மாணவர்கள் காயமடைந்து, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.




மாணவப் போராளிகளைத் தாக்குவதற்கு இரும்புப் பொல்லுகளுடன் பொலிசார் தயாராகின்றனர் (டெய்லி ரெலிகிராப்)

30 https://www.newsfirst.lk/2017/02/police-use-water-cannons-tear-gas/
31 https://www.newsfirst.lk/2017/02/police-fire-tear-gas-water-cannons-disperse-protest-medical-students/
32 https://www.newsfirst.lk/2017/03/police-fire-tear-gas-university-students-protesting-colombo/
33 https://www.newsfirst.lk/2017/05/tear-gas-fired-protesting-students-defied-court-orders-video/

- ❖ மே 24 அன்று, கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து ஜனாதிபதி செயலகத்திற்கு பல்கலைக்கழக மாணவர்களினாலும், அவர்களது பெற்றோர்களினாலும் ஆர்ப்பாட்டமொன்று மேடையேற்றப்பட்டது.[34] லோட்டஸ் சுற்று வளைவில் ஆர்ப்பாட்டத்தை பொலிசார் தடுத்ததுடன், கண்ணீர் புகையையும், நீர் பீச்சியடித்தலையும் மேற்கொண்டு போராட்டக்காரர்களைக் கலைந்து போகச்செய்தனர். காயமடைந்தவர்கள் மத்தியில் மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஊடகவியலாளர் ஒருவர்..

- ❖ ஜூன் 21 அன்று, போராட்டமொன்றின் அங்கமாக சுகாதார அமைச்சினுள் பிரவேசித்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் அங்கு குடியிருந்தனர். விசேட திடீர் வேட்டைப் படை உட்பட கலகம் அடக்கும் பொலிஸ் பணிக்கமர்த்தப்பட்டு, மாணவர்களைக் கலைந்து போகச்செய்வதற்காக குண்டாந்தடிப் பிரயோகமும், கண்ணீர் புகைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. மோதலில் 84 முதல் 96 மாணவர்கள் காயமடைந்ததுடன், அவர்கள் சகலரும் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.[35][36]

- ❖ ஒக்ரோபர் 10 அன்று, மாணவப் போராட்டக்காரர்களைத் தாக்குவதற்காக இரும்புக் கம்பிகளை பொலிஸ் அலுவலர்கள் பயன்படுத்துவது புகைப்படமெடுக்கப்பட்டது.[37] அறிக்கைகளின் பிரகாரம், குறைந்தபட்சம் 14 மாணவர்கள் காயங்களுடன் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## iv. <u>ஊடகங்களை, விசேடமாக தமிழ் இதழியலாளர்களை அடக்குதல்</u>

2017இல் இதழியலாளர் ஒருவரும் கொல்லப்படாத அல்லது ஆட்கடத்தப்படாத போதிலும் (அத்துடன் 2015-2016இலும்) வடக்கில் தமிழ் இதழியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகள் கிரமமாக இடம்பெறுவதாகத் தோன்றுகின்றது. எச்சரிக்கையூட்டும் விதத்தில், 2017 பிற்பகுதியில் இணையதள தணிக்கை மீள அமுலுக்கு வந்தது. கீழே சில சம்பவங்கள் உள்ளன.

### *18. CIDஇனால் யாழ்ப்பாணம் இதழியலாளர் விசாரிக்கப்பட்டதுடன், சிங்களத்திலான வாக்குமூலத்தில் கைசாத்திடச் செய்யப்பட்டார்*

ஜூலையில், 'இனவாதரீதியில் முரண்பாட்டிலான தன்மை' ஒன்றில் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் நடத்தப்பட்ட பத்திரிகை மகாநாட்டினை ஒலிபரப்பு செய்தமை பற்றி விசாரிப்பதற்காக கொழும்புக்கு வருமாறு குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினால் [Criminal Investigation Department (CID)] பல்-எண்ணிக்கையிலான அழைப்பாணைகளை வடக்கு தமிழ், அச்சு, ஒலிபரப்பு இதழியலாளர் ரி.பிரதீபன் பெற்றார்.[38] வெறுமனே மூன்று நாட்களைக் கொண்ட அறிவித்தலுடன் ஜூலை 10 அன்று கொழும்புக்கு வருமாறு பிரதீபனுக்கு முதலில் உத்தரவிடப்பட்டது. வீதி விபத்தொன்றில் காயங்கள் ஏற்பட்டதன் காரணமாக கொழும்புக்கு பிரயாணம் செய்ய இயலாதிருப்பதாக CIDஇன் சார்பாக அறிவித்தலை வழங்கிய பொலிசாருக்கு பிரதீபன் அறிவித்தார். ஜூலை 12 அன்று இன்னொரு அழைப்பாணையை பிரதீபன் பெற்றார். தனது காயங்களில் இருந்து இன்னுமே சுகமடையாத போதிலும், CID அலுவலர்களினால் விசாரிக்கப்படுவதற்காக ஜூலை 18 அன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பிரதீபன் இறுதியாக கேட்கப்பட்டிருந்தார்.

---

[34] https://www.newsfirst.lk/2017/05/tear-gas-water-cannons-fired-medical-faculty-students-parents/
[35] http://www.sundaytimes.lk/article/1024057/84-students-injured-as-police-fire-tear-gas-baton-charged-at-health-ministry
[36] http://www.dailynews.lk/2017/06/27/local/120175/storming-health-ministry-two-more-suspects-arrested
[37] https://www.colombotelegraph.com/index.php/police-brutality-continues-no-more-batons-now-its-iron-bars/
[38] http://www.tamilguardian.com/content/tamil-journalist-issued-multiple-summons-cid-over-broadcast-press-conference

ஜூலை 18 அன்று, பத்திரிகை மகாநாடு பற்றி மூன்று மணித்தியாலங்களுக்கு CID அலுவலர்களினால் பிரதீபன் விசாரிக்கப்பட்டதுடன், புகைப்படங்களை முன்வைக்குமாறும் கேட்கப்பட்டார். தமிழில் வழங்கப்பட்ட அவரது வாக்குமூலம், அவர் புரிந்துகொள்ள முடியாத மொழியொன்றான சிங்களத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டது. பின்னர் அதன் உள்ளடக்கங்களைச் சரிபார்ப்பதற்கு இயலாதிருந்த போதிலும், இந்த சிங்கள ஆவணத்தில் கைச்சாத்திடுமாறு பிரதீபனுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.[39]

### *19. யாழ்ப்பாணத்தில் தமிழ் வானொலி இதழியலாளர் மீது தாக்குதல*

டிசம்பர் 2 அன்று, சாவகச்சேரியில் உள்ள தனது வாகனத்தை தமிழ் வானொலி இதழியலாளர் சண்முகநாதன் மனோகரன் செலுத்திக் கொண்டிருந்த போது முச்சக்கர வண்டி ஒன்றினால் நிறுத்தப்பட்டார்.[40] முச்சக்கர வண்டியிலிருந்து மூன்று பேர் வெளியே வந்து, மனோகரனை தாக்கியதுடன், வெளியாட்கள் அங்கு வரவே, அவர்கள் கலைந்து சென்றுவிட்டனர். சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடொன்று தாக்கல் செய்யப்பட்டதுடன், முச்சக்கரவண்டியின் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

### *20. முல்லைத்தீவில் 8 இதழியலாளர்கள் தடுத்துவைப்பு*

டிசம்பர் 9 அன்று, முல்லைத்தீவில் சிங்களமயம் குறித்து விசாரித்த 8 தமிழ் இதழியலாளர்கள் சைக்கிளில் வந்த படை வீரர் ஒருவரினால் விசாரிக்கப்பட்டதுடன், அவர் இன்னொரு யுத்த வீரரையும் அங்கு அழைக்கவே, அவர் இதழியலாளர்களைத் தடுத்து வைத்தார்.[41] ஆளடையாளத்தை வழங்கிய போதிலும், அரை மணித்தியாலத்திற்கு மேலாக அந்த இதழியலாளர்களை படை வீரர்கள் தடுத்து வைத்திருந்ததுடன், பின்னர் அங்கு பொலிசார் வரவழைக்கப்பட்டனர். சாதாரண உடைகளில் பொலிஸ் அலுவலர்கள் அங்கு வந்ததுடன், ஏதேனும் ஆளடையாளத்தை வழங்குவதற்கும் மறுத்தனர். இதழியலாளர்களின் புகைப்படக் கருவிகளை இந்த அலுவலர்கள் பறிமுதல் செய்து, படை வீரர்களுக்கு அவற்றைக் கையளித்தனர். பகுதியில் எடுக்கப்பட்ட சகல புகைப்படங்களையும், ‘வீடியோ’க்களையும் படை வீரர்கள் அழித்தனர். இதழியலாளர்களை அலுவலர்கள் புகைப்படமெடுத்ததுடன், அவர்களை அங்கிருந்து செல்வதற்கு அனுமதிப்பதற்கு முன் அவர்களது ஆளடையாள இலக்கங்களையும், வாகனப் பதிவு இலக்கங்களையும் பதிவுசெய்தனர்.

### *21. முல்லைத்தீவில் இதழியலாளர் மீது தாக்குதல்*

டிசம்பர் 9 அன்று, முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்தில் உள்ள பண்டிக்குளம் பகுதியில் தமிழ் இதழியலாளர் சுப்பிரமணியம் பாஸ்கரன் வாகனத்தை செலுத்திச் சென்ற வேளை, பதிவு இலக்கத் தகடு அற்ற மோட்டார்சைக்கிள் ஒன்றில் வந்த மூன்று பேரினால் தாக்கப்பட்டார்.[42] தாக்கியவர்களினால் பாஸ்கரன் துரத்தப்பட்டதுடன், அவரது தலையையும், கரங்களையும் காயப்படுத்தி, பொல்லுகளுடன் அவரை அடிப்பதற்கும் முயற்சித்துள்ளனர். சம்பவ இடத்திற்கு பொலிசார் வந்தவுடன் தாக்குதல் நடத்தியவர்கள் கலைந்து சென்றனர். தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் உள்ளூர்வாசிகளினால் பிடிக்கப்பட்டார்.

### *22. மருதங்கேணி போராட்டம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளருக்கு அச்சுறுத்தல்*

மார்ச் 21 அன்று, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மருதங்கேணியில் காணாமல்போகச் செய்யப்பட்டோரின் குடும்பங்களினாலான போராட்டமொன்று குறித்து செய்தி சேகரிப்பதற்கு முயன்ற வேளை மூன்று தமிழ் இதழியலாளர்கள் கண்காணிப்புக்கும், தொந்தரவுக்கும் மற்றும் அச்சுறுத்தலுக்கும்

---

[39] http://www.tamilguardian.com/content/tamil-journalist-interrogated-3-hours-cid-and-pressured-sign-statement-sinhalese
[40] http://www.tamilguardian.com/content/tamil-radio-journalist-attacked-jaffna
[41] http://www.tamilguardian.com/content/sri-lankan-army-detains-tamil-journalists-documenting-sinhalisation-mullaitivu
[42] http://www.tamilguardian.com/content/tamil-journalist-attacked-mullaitivu

உட்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.[43] யாழ்ப்பாணத்தையும், சாவகச்சேரியையும் சேர்ந்த நிருபர்களின் கூற்றுப்படி, போராட்டத்திற்குச் செல்லும் வழியில் அவர்களைப் படை வீரர்கள் புகைப்படமெடுத்துள்ளார்கள். யாழ்ப்பாணத்திற்கு திரும்பும் வழியில், மோட்டார் சைக்கிள்களில் வந்த இரு படை வீரர்களினால் அவர்கள் பின்தொடரப்பட்டதுடன், கொச்சை தமிழில் நிற்குமாறு படை வீரர்கள் கூச்சலிட்டுள்ளனர். இதழியலாளர்கள் நின்ற பின், அவர்கள் விசாரிக்கப்பட்டதுடன், பகுதிக்கு வருவதற்கு அவர்களுக்கு அனுமதி அவசியம் என அவர்களிடம் கூறப்பட்டது. அவர்களது வாகன உத்தரவுப்பத்திரத் தகட்டு இலக்கங்கள் குறித்துக்கொள்ளப்பட்டதுடன், வழியில் நிற்காமல் நேரே வீட்டுக்குச் செல்லுமாறும் அவர்களைப் படை வீரர்கள் அச்சுறுத்தினர். வெளிப்படையாகவே நிருபர்களை படை வீரர்களில் ஒருவர் அணுகி, தாக்குவது போல் பாசாங்கும் செய்தார்.

ஜூலை 18 அன்று, அதே போராட்டம் குறித்து செய்தி சேகரிப்பதற்கு முயற்சித்த வேளை யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட இதழியலாளர் உதயராசா ஷாலின் பொலிசாரினால் நிறுத்தப்பட்டு, தொந்தரவு செய்யப்பட்டார்.[44] போராட்டத்திற்குச் செல்லும் வழியில் ஷாலின் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இரு படை வீரர்களினால் நிறுத்தப்பட்டு, அவரது உத்தேசமான செல்லுமிடம் எது என அவர்கள் விசாரித்ததுடன், பின்னர் போராட்டம் முடிவடைந்துவிட்டதாக அவரை வழிப்படுத்த அவர்கள் முயற்சித்துள்ளனர். அவரது ஆளடையாளத்தைச் சரிபார்த்த பின்னர், வடக்கிலும் கிழக்கிலும் ஷாலின் ஒரு பெருமுயற்சியிலான நிருபர் என்பதை அடையாளங்கண்ட படை வீரர்கள் பொய்களைப் பரப்புவதாக அவரைக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

### *23. ஹம்பாந்தோட்டையில் இதழியலாளர் மீது பொலிஸ் தாக்குதல்*



*பொலிஸ் அதிகாரி ஓர் ஊடகவியலாளரைத் தாக்குகின்றார்-அனுசரணை Ada Derana*

ஒக்ரோபர் 6 அன்று, பாதுகாவலுக்கு எடுக்கப்பட்ட வேளை இதழியலாளர் சுசந்த பண்டார கருணாரத்னவை பொலிஸ் உதவி அத்தியட்சகர் ரொஷான் தளுவத்தை தாக்கியதாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.[45] இரு பொலிஸ் அலுவலர்களினால் கருணாரத்ன தாங்கிப்பிடிக்கப்பட்ட வேளை, அவரை தளுவத்தை அறையும் ‘வீடியோ’ ‘ஒன்லைனில்’ ‘வைரலாக’ பரவியதுடன், தொலைக்காட்சியிலும் பரவலாக ஒளிபரப்பப்பட்டது. இதன் பின்னர் சம்பவம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணையொன்றை ஆரம்பித்தது. அதன் சொந்தத்தில் விசாரணையொன்றை ஆரம்பிப்பதற்கு முன் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிடமிருந்து அறிக்கையொன்றுக்காக காத்திருப்பதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு வலியுறுத்தியது. எனினும்,

---

43 http://www.tamilguardian.com/content/tamil-journalists-threatened-sri-lankan-soldiers
44 http://www.tamilguardian.com/content/tamil-journalist-harassed-sri-lankan-soldiers-en-route-disappearances-protest
45 http://srilankabrief.org/2017/10/journalist-attacked-by-police-officer-in-public-hrc-sl-launch-an-investigation/

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் ஒருவரினால் இந்த வலியுறுத்தலுக்கு சவால்விடுக்கப்பட்டதுடன், சுதந்திரமான உறுப்பொன்றாக தனது சொந்த விசாரணையாளர்களைத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுப்பி இருக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.[46]

## *24.* Lanka E Newsஐயும், வேறு இணைய தளங்களையும் தடைசெய்தல்

2017 நொவம்பர் 8 அன்று, அரசாங்கத்தை உயர்ந்தளவில் விமர்சிக்கும் கட்டுரைகளை அடிக்கடி பதிவேற்றும் Lanka E News என்ற சர்ச்சைக்குரிய ‘ஒன்லைன்’ செய்தி இணையதளம் தொலைதொடர்புகள் கட்டுப்பாட்டு அதிகாரசபையினால் இலங்கையில் தடைசெய்யப்பட்டது.[47] சிவில் சமூக அவதானிப்பாளர்களின் கூற்றுப்படி, சமூக ஊடகங்களில் குறை கூறுகின்ற விஷயதானத்தையும், இழிவுபடுத்தும் மொழியையும் பதிவேற்றுகின்றவர்களைக் கைது செய்யுமாறு ஜனாதிபதி சிறிசேனவிடம் அரசாங்கப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன கேட்டுக்கொண்ட பின்னரே தடை செய்யப்பட்டுள்ளது.[48]

இதைத் தொடர்ந்து தடைகள் மீது மேலும் தகவலைப் பெறுவதற்காக தொலைதொடர்புகள் கட்டுப்படுத்தல் அதிகாரசபையுடன் தகவலுக்கான உரிமை குறித்த வேண்டுகோள்களை Groundviews, ‘மாற்றம்’ மற்றும் ‘விகல்ப’ ஆகியன தாக்கல் செய்தன. 2015இல் சிறிசேன-விக்ரமசிங்க நிருவாகம் அதிகாரத்திற்கு வந்தது முதல் 13 இணையதளங்கள் தடைசெய்யப்பட்டுள்ளதாக வேண்டுகோளின் முடிவுகள் வெளிப்படுத்தியதுடன், இவற்றில் பெரும்பாலானவை அரசியல் இணையதளங்களாகும். இந்த இணையதளங்களைத் தடைசெய்வதற்கான ஆரம்ப உத்தரவுகள் குறைந்தபட்சம் 4 இணையதளங்களுக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து வந்துள்ளதாக தகவலுக்கான உரிமை ஊடாக திரட்டப்பட்ட ஆதரவளிக்கும் ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ளன.[49] “தவறான தகவலை வெளியிடுவதுடன், ஜனாதிபதியின் மரியாதைக்கு ஊறு விளைவிக்கின்றன” என்பதே சில ஊடகங்களைத் தடைசெய்வதற்கு வழங்கப்பட்ட காரணங்கள் உள்ளடக்குகின்றன.

முன்னைய ராஜபக்ஷ ஆட்சியின் போது பொதுவான ஓர் அடக்குமுறையிலான தந்திரம் போன்ற ‘ஒன்லைன்’ செய்தி இணையதளங்களுக்கான அடைதலை சிறிசேன-விக்ரமசிங்க வழிநடத்தலிலான நல்லாட்சி அரசாங்கம் தடைசெய்யும் முதலாவது பதிவுசெய்யப்பட்ட தருணமாக விளங்குவதனால், Lanka E Newsஇன் தடையும், தகவலுக்கான உரிமை குறித்த விண்ணப்பத்திலிருந்து வெளிப்படுத்தல்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

## V. வழக்கறிஞர்களுக்கும், சாட்சிகளுக்கும் எதிரான அடக்குமுறைகள்

### *25. மதச் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை மீது பேசியதற்காக மனித உரிமைகள் வழக்கறிஞருக்கு அச்சுறுத்தல்கள்*

உள்ளூர் அயலவர்கள் மற்றும் பௌத்த மதகுருமார் உட்பட பெரும்பான்மை பௌத்த செயற்பாட்டாளர்களினால் சிறுபான்மை கிறிஸ்தவ சமயநெறி பரப்புகின்ற குழுக்களுக்கு எதிராக 195 தாக்குதல்களை ஆவணப்படுத்திய தேசிய கிறிஸ்தவ சமயநெறி பரப்புகின்ற முன்னணியிலான அறிக்கையொன்றிலிருந்து வெளிப்பட்ட எண்ணிக்கையை மனித உரிமைகள் செயலார்வலரும், சட்டத்தரணியுமான லக்ஷான் டயஸ் ஜூன் 14 அன்று தெரண தொலைக்காட்சியில் “அளுத் பார்லிமென்துவ” என்ற நிகழ்ச்சியில் பேசிய போது குறிப்பிட்டார்.[50]

ஜூன் 17 அன்று ஐ.ரி.என். மீது ஒளிபரப்பப்பட்ட அறிக்கையொன்றில் இந்தச் சார்த்துரைகளுக்கு அப்போதைய நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ பதிலிறுத்தார். டயஸினால் வழங்கப்பட்ட

[46] http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=173012
[47] http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=174876
[48] http://www.cpalanka.org/on-the-blocking-of-lanka-e-news-website-in-sri-lanka/
[49] https://groundviews.org/2017/12/08/blocked-rti-requests-reveal-process-behind-blocking-of-websites-in-sri-lanka/
[50] http://www.thesundayleader.lk/2017/06/25/media-and-christian-organisations-raise-concerns/

எண்ணிக்கைகளை தவறாகக் குறிப்பிட்டு அவரது வலியுறுத்தல்கள் அடிப்படையற்றவை என உறுதிப்படுத்தியதுடன், 24 மணித்தியாலங்களுக்குள் தேசத்திற்கு டயஸ் மன்னிப்பு கேட்காவிட்டால் அவரின் வழக்காடும் உரிமை பறிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அச்சுறுத்தினார்.[51] இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக கொழும்பு கத்தோலிக்க அதி மேற்றிராணியார் கார்டினல் மல்கம் ரஞ்ஜித்துடன் தான் பேசியதாகவும், அத்தகைய விடயம் நடக்கவில்லை என தன்னிடம் கூறப்பட்டதாகவும் ஜனாதிபதி சிறிசேன தெரிவித்தார். எனினும், கிறிஸ்தவத்தின் கத்தோலிக்கம் சாராத பிரிவினருக்கு டயஸின் எண்ணிக்கைகள் குறிப்பானவையாகும்.




*Civil society groups in Colombo protested against the threats made by the minister, photo courtesy – Vikalpa*

வழக்காடும் உரிமையைப் பறிக்கும் ராஜபக்ஷவின் பகிரங்க அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து, முன்னைய ஆட்சியின் போது பாரதூரமான அச்சுறுத்தல்களின் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறாத போதிலும், தனது சொந்த தனிப்பட்ட பாதுகாப்புக்கான அச்சங்களின் காரணமாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கு டயஸ் தள்ளப்பட்டார்.

தன்னிச்சையான நடவடிக்கையுடன் செயலார்வலர்களைப் பயமுறுத்துவதற்கும், அச்சுறுத்துவதற்கும் இலங்கையின் அரசியல்வாதிகள் தொடருகின்ற குறிப்பிடத்தக்க விதத்திலான வெட்கங்கெட்ட தன்மையை சம்பவம் முனைவுபடுத்துகின்றது. உண்மையில், டயஸின் வழக்காடும் உரிமையைப் பறிப்பதற்கான ராஜபக்ஷவின் அச்சுறுத்தல் அப்போதைய நீதி அமைச்சராக அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் நோக்கெல்லைக்கு அப்பால் சென்றது. அத்தகைய அச்சுறுத்தல்களின் பகிரங்கமானதும், வெளிப்படையானதுமான தன்மை கரிசனையொன்றாகத் தொடர்வதுடன், மாறுபட்ட கருத்தின் குரல்களுக்கு உண்மையான சுதந்திரத்திற்கு பொறுப்புகூறுவதற்கும், அனுமதிப்பதற்கும் அதிகாரத்தின் அத்தகைய துஷ்பிரயோகங்களை தாங்கிப்பிடித்துக் கொள்வதற்கு அரசாங்கத்தின் இணக்கத்தன்மையின் மேலாக சந்தேகங்களை எழுப்புகின்றது.

[51] https://groundviews.org/2017/06/18/in-support-of-religious-minorities-rule-of-law-and-lakshan-dias/

## 26. *மனித உரிமைகள் வழக்கறிஞர் மீது தாக்குதல்*

கொழும்பு மாவட்டத்திலுள்ள ராகமையை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் வழக்கறிஞர் ஒருவராக எச்.ரி.அமிதா ஆரியரத்ன விளங்குகின்றார். 20 வருடங்களுக்கு மேலாக சட்டத்துறையில் செயற்படும் ஆரியரத்ன இலங்கை வழக்கறிஞர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் என்பதுடன், 1997இல் இலங்கை மீஉயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

2017 ஜூலை 12 அன்று, இரவு 9.20 மணியளவில், உணவகமொன்றில் உணவொன்றின் பின்னர் வீட்டுக்குச் செல்லும் நம்பிக்கையில் முச்சக்கரவண்டியொன்றில் ஆரியரத்ன ஏறினார். சவாரியின் போது உணர்வை இழந்துவிட்டதாக ஆரியரத்ன வலியுறுத்துகின்றார். சதுப்புநிலமொன்றுக்கு அருகில் உள்ள கைவிடப்பட்ட காணித்துண்டொன்றின் மீது அவர் கண்விழித்ததுடன், அவருக்கு அடுத்ததாக இராணுவப்பாணியிலான உருமறைப்பிலான உடைகளுடன் இரண்டு பேர் நிற்பதை அவர் அவதானித்தார். அவரது 'சேர்ட்' அகற்றப்பட்டு, அவர் 'பெனியனுடனும்', காற்சட்டையுடனுமே இருந்தார். அவர் எழும்புவதற்கு முயன்றபோது, வாய்மொழியிலான மரண அச்சுறுத்தல்களை வழங்கிய அதேவேளை, அவரது முகம், தலை மற்றும் உடல் ஆகியனவற்றைத் தாக்குவதை அவர்கள் ஆரம்பித்தனர். பொலிசாருக்கு எதிரான வழக்குகளில் அவர் ஆஜராவதன் காரணமாக கொல்லப்படுவதற்காக அவர் அங்கு கொண்டு வரப்பட்டார் என ஆரியரத்னவிடம் அவர்கள் கூறினார்கள். அருகில் தரித்திருந்த கறுப்புநிற வாகனமொன்றின் உள்ளே அதிகளவு அலுவலர்கள் அமர்ந்திருப்பதை ஆரியரத்ன அவதானித்தார். "அவனைக் கொல்லு" என அவர்களில் ஒருவன் கத்துவதை ஆரியரத்ன செவிமடுத்தார்.



அமித்த ஆரியரத்ன மருத்துவ மனையில்

அடுத்து ஆறு பேராலும் அவர் புணரப்படுவார் என அச்சுறுத்திய அதேவேளை ஆரியரத்னவின் ஆடைகளைக் களைவதற்கு அவர்கள் முயற்சித்தனர். அவரது காற்சட்டையைக் கழற்றுவதற்கு முயற்சித்தக் போது ஆரியரத்ன அதைத் தடுத்தார். அலுவலர்களில் ஒருவர் தனது கைத்துப்பாக்கியை வெளியே எடுத்து, ஆரியரத்னவை நோக்கி குறிவைத்து, "இப்போது நான் உன்னைச் சுடப்போகின்றேன். உனது கடைசி ஆசையை அல்லது கடைசி எண்ணத்தை இட்டு நீ நினைத்துப் பார்க்க முடியும்" என்றார். இதற்கு ஆரியரத்ன, "என்னிடம் ஒன்றும் இல்லை. ஆனால், எனது கடமை மட்டுமே உள்ளது. நீங்கள் உங்கள் கடமையை அல்லது நீங்கள் விரும்பும் எதையாவது செய்யுங்கள்" எனப் பதிலளித்தார்.

உணர்வின்மையை அடையும் நிலையை அடையும் வரை ஆரியரத்ன தாக்கப்பட்டார். உணர்வை அவர் ஈட்டிக்கொண்ட போது, அவரது கால்களைச் சுற்றி காற்சட்டை இருந்த நிலையில் தனியாக இருந்தார். அவரது ‘சேர்ட்’, இரு நடமாடும் தொலைபேசிகள், தேசிய ஆளடையாள அட்டை, வழக்கறிஞரின் ஆளடையாள அட்டை, சுமார் 30,000 இலங்கை ரூபாய், அலுவலக ஆவணங்களுடனும், இறப்பர் முத்திரைகளுடனும் ஒரு சிறிய பை, 2-3 USB memory chips, ஒரு சோடி மூக்குக்கண்ணாடி மற்றும் ஒரு கைக்கடிகாரம் என யாவுமே காணாமல் போயிருந்தன.

வீதியை நோக்கி தள்ளாடிச் சென்ற ஆரியரத்ன தனது வீட்டிலிருந்து சுமார் மூன்றரை கிலோ மீட்டர்கள் தூரத்தில் உள்ள தளுபிட்டிய சந்திக்கு அருகில் இருப்பதை உணர்ந்துகொண்டார். முச்சக்கரவண்டியொன்றை நிறுத்துவதற்கு அல்லது வழிபோக்கர்களிடம் உதவிபெறுவதற்கு ஆரியரத்ன முயற்சித்தார். ஆனால், அவ்வாறு அவரினால் செய்ய முடியவில்லை. அதனால் வீட்டுக்கு நடந்து செல்வதை ஆரம்பித்தார். ராகம பட்டினத்தை அடைந்த அவர் தனது வீட்டுக்குச் செல்வதற்கு முச்சக்கரவண்டியொன்றைக் வாடகைக்கு எடுத்து, காலை 2.25 மணிக்கு வீட்டை அடைந்தார்.

வீட்டை அடைந்த பின்னர், பொலிஸ் அவசரகால தொலைபேசியுடன் ஆரியரத்னவின் மனைவி தொடர்புகொண்டார். பொலிஸார் 45 நிமிடங்களில் வந்து இறங்கியதுடன், முறைப்பாடொன்றைச் செய்வதற்கு பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு ஆரியரத்னவை அவர்கள் கேட்டுக்கொண்டனர். எனினும், உடல்ரீதியாக இயலாதிருந்தபடியினால், பதிலாக அவர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மறுநாள் விடுவிக்கப்பட்டார். மருத்துவ அறிக்கையின் பிரகாரம், நெஞ்சு, தலை மற்றும் பின்புறம் ஆகியவற்றில் காயங்களை ஆரியரத்ன அடைந்துள்ளார். ஆரியரத்ன வைத்தியசாலையில் இருந்த வேளை பொலிசார் அவரது வாக்குமூலத்தைப் பெறவில்லை. ஆரியரத்னவின் சார்பாக வாக்குமூலமொன்றை அளிப்பதற்கு ஆரியரத்னவின் மனைவியும், கனிஷ்ட வழக்கறிஞர் ஒருவரும் அணுகிய போது பொலிசார் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

தலையிடியையும், பின்புற வலிகளையும் ஆரியரத்ன தொடர்ந்துமே அனுபவிப்பதுடன், இதற்காக கிரமமான ஆயுர்வேத சிகிச்சையை அவர் பெறுகின்றார்.

*27.* ***சேனக்க பெரேரா***



*சட்டத்தரணி சேனக்க பெரேரா-அநுசரணை Daily Mirror*

சேனக பெரேரா ஒரு வழக்கறிஞர் என்பதுடன், கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் தலைவருமாவார். 2012 வெலிக்கடை சிறைச்சாலைக் கலகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நாடுவதற்கான இயக்கத்தின் முக்கியமான நபரொருவராக பெரேரா விளங்குகிறார். இக் கலவரத்தில் 27 கைதிகள் மரணமானதுடன், கைதிகள், படை வீரர்கள், சிறைக் காவலர்கள் மற்றும்

விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் உட்பட 40 பேர் காயமடைந்திருந்தனர். கைதிகளில் சிலர் மரணதண்டனைக் கைதிகளாவர் என செயலார்வலர்களும், நேரடி சாட்சிகளும் சார்த்துரைக்கின்றனர். ஏப்ரலில், முன்னாள் கைதியும். படுகொலைக்கான நேரடி சாட்சியும் மற்றும் செயலார்வலருமான நந்திமல் டீ சில்வாவின் சார்பாக எழுத்தாணை விண்ணப்பமொன்றை பெரேரா தாக்கல் செய்தார்.

ஜுலை 11 அன்று இரவு 7.45 மணியளவில், வழக்கைப் பிரதிநிதித்துவம் செய்வதை அவர் தொடர்ந்தால் அவரது உயிர் போக்கடிக்கப்படுமென அச்சுறுத்தல் விடுத்து அனாமதேய நபர் ஒருவரிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்றை பெரேரா பெற்றார்.[52] இந்த அச்சுறுத்தல் குறித்து முறைமையான முறைப்பாடொன்றை கம்பஹா மாவட்டத்தில் உள்ள நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் பெரேரா தாக்கல் செய்தார். அரசாங்க ஊடகத்துடன் பேசுகையில், இரு வாரங்களின் பின்னர் ஜுலை 28 அன்று நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு அவர் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக அச்சுறுத்தல் இருந்திருக்க முடியும் என பெரேரா உறுதிப்படுத்தினார்.

### *28. சுதேஷ் நந்திமல் டீ சில்வா*

வெலிக்கடை சிறைச்சாலையில் சுதேஷ் நந்திமல் டீ சில்வா ஒரு முன்னாள் கைதி என்பதுடன், 2012 வெலிக்கடை சிறைச்சாலைக் கலகங்களின் முக்கியமானதொரு சாட்சியுமவார். சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் செயலாளராக விளங்கும் அவரை, வழக்கறிஞர் சேனக பெரேரா பிரதிநிதிப்படுத்துகின்றார்.



*நந்திமால் வீட்டு கேட்டில் (Gate) காணப்படும் துப்பாக்கிச் சன்னங்களின் அடையாளங்கள்*

அவரது வழக்கறிஞர் அச்சுறுத்தப்பட்ட அதே தினம், அண்ணளவாக அதேநேரத்தில் அச்சுறுத்தும் தொலைபேசி அழைப்பொன்றை டீ சில்வாவும் பெற்றார்.[53] அவரது வழக்கறிஞர் போன்று, ஜுலை 11 அன்று இடம்பெறவுள்ள வழக்கில் அவரது சம்பந்தத்தைக் கைவிடுமாறு டீ சில்வாவுக்கு கூறப்பட்டது. அவர் பின்னர் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள திஸ்ஸமஹராம பொலிஸ் நிலையத்தில் இந்தச் சம்பவம் குறித்து முறையிட்டார். செப்ரெம்பர் 4 அன்று கொழும்பு மாவட்டத்தில் உள்ள மொறட்டுவையில் அவர் தங்கியிருந்த வீட்டை நோக்கி சுடப்பட்டது. டீ சில்வா மீண்டும் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

[52] http://www.dailymirror.lk/article/Key-eyewitness-lawyer-threatened-with-death-132788.html
[53] http://www.dailymirror.lk/article/Key-eyewitness-lawyer-threatened-with-death-132788.html

2017இலும், அதற்கு முன்னரும் பெருமளவு வேறு அச்சுறுத்தல்களையும் டி சில்வா பெற்றார். பொலிஸில் முறைப்பாடு செய்த போதிலும், ஒருவருமே பொறுப்புக்குள்ளாக்கப்படவில்லை.

## vi. மனித உரிமைகள் காப்பாளர்களின் மதிப்பைக் குறைக்கும் முயற்சிகள்

2017 முழுவதும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர் உட்பட உயர் பதவிநிலையிலான அரசாங்க அதிகாரிகள், மனித உரிமைக் காப்பாளர்களினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் மற்றும் உள்ளூர் அத்துடன் சர்வதேச மனித உரிமைகள் இயக்கங்களினதும் மதிப்பைக் குறைக்கும் விதத்தில் கூற்றுக்களைச் செய்துள்ளனர். நல்லிணக்கம் மீது சிறிசேனவின் சர்வதேச வாக்குவன்மை, யுத்த கால அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் ஆகியவற்றுக்கான பொறுப்புக்கூறுதல் மீதான அவரது பகிரங்க கூற்றுகள் ஆகியன 2015இல் நாடு இணைந்து கைச்சாத்திட்ட UNHRC தீர்மானத்திற்கான இலங்கையின் அர்ப்பணிப்புக்கு முற்றிலும் மாறானவையாகும்.

இந்த அறிக்கைகள் இருந்த போதிலும், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல், அமைச்சர் மனோ கணேசனின் அறிக்கை போன்று அரசாங்கத்தினுள் ஒரு சில முன்னேற்றகரமான குரல்கள் உள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவது பற்றிய ராஜபக்ஷவின் கருத்துக்களைத் தொடர்ந்து "வசதிப்படுத்தல்" என்ற சொல்லைப் பயன்படுத்துவதற்கு தான் விரும்புவதாக மனோகணேசன் தெரிவித்தார்.[54] ராஜபக்ஷவின் குறிப்புகளுக்கு பதிலளித்த கணேசன் கூறியதாவது: "மத மற்றும் அரசியல் சக்திகளிலிருந்து தேசிய சகவாழ்வுக்கு ஏற்படுகின்ற அதிகளவு இடைஞ்சல்களை நான் குறித்துக்கொள்கிறேன்... அத்தகையதொரு கொள்கையையும் அத்துடன் பெருமளவு அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்திற்கும், நல்லிணக்கத்திற்கும் எதிரானவை என்பதையும், அவற்றை மூடுமாறு அழைப்புவிடுக்கப்படுவதையும் என்னால் பொதுமைப்படுத்த முடியாது." ஜனாதிபதி சிறிசேன மற்றும் முன்னாள் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ போன்றவர்களிடமிருந்து அதிகளவு அடக்குமுறையிலான வாக்குவன்மைக்கு கணேசனின் உறுதியான கருத்துக்கள் ஒரு வரவேற்கத்தக்க மாற்று மருந்தாக உள்ள அதேவேளை, நல்லாட்சி அரசாங்கத்தின் மனித உரிமைகளுக்கு பங்கிடப்பட்ட தொலைநோக்கொன்றின் இன்மையையும் அவை எடுத்துக்காட்டுகின்றன. தேசிய அரசாங்கத்தில் இருப்பதாக நம்பப்படும் உறுப்பினர்களிடமிருந்து முரண்படுகின்ற கூற்றுக்கள் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரகாரம், நல்லாட்சியை இயற்றுவதற்கான அரசாங்கத்தின் இணக்கத்தின் மேலாக சந்தேகங்களை விதைக்கின்றது.

### *29. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கூற்றுக்கள்*

பொறுப்புக்கூறல் நடைமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதற்கு எதிரான தனது நிலையையும் அத்துடன் அத்தகைய விசாரணைகளிலிருந்து "யுத்தக் கதாநாயகர்களைக் காப்பாற்றுவதற்கான" தனது திடசங்கற்பத்தையும் 2017இல் பெருமளவு தடவைகள் ஜனாதிபதி சிறிசேன வெளிப்படுத்தியுள்ளார். மார்ச் 3 அன்று, யுத்த கால அராஜங்களுக்கான விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதற்கு ஐ..நா..இன் கோரிக்கைகளை நிராகரித்து அறிக்கையொன்றை ஜனாதிபதி சிறிசேனவின் அலுவலகம் விடுத்திருந்தது. தனது அறிக்கையில், "எனது அரசாங்கத்தை எவ்வாறு நிருவகிப்பது என உத்தரவிடுவதற்கு அரசாங்க சார்பற்ற நிறுவனங்களை அனுமதிக்க முடியாது" என சிறிசேன தெரிவித்தார். இது ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் நிலவிய அரச சார்பற்ற நிறுவன எதிர்ப்பு வாக்குவன்மையை யுத்தத்தின் உச்சநிலையிலும், அதன் பின்னரும் மனித உரிமைகள் குறித்து ஊக்கத்துடன் இயங்குவதையிட்டு மதிப்பைக் குறைப்பதற்கும் அத்துடன் அதை அடக்குவதற்கும் பயன்படுத்தப்பட்ட வாக்குவன்மையை எதிரொலிக்கின்றது.

செப்ரெம்பர் 3 அன்று நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களில் பேசிய ஜனாதிபதி, "சர்வதேசச் சமூகத்திலிருந்து" பொதுவாக இராணுவத் தலைவர்களையும், குறிப்பாக முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவையும் பாதுகாப்பதாக சபதம் செய்தார்.[55] இலங்கை இராணுவத்தில் சார்த்துரைக்கப்பட்ட யுத்தக் குற்றங்களில்

[54] http://srilankabrief.org/2017/07/sri-lanka-i-will-facilitate-but-not-regulate-ngos-minister-ganesan/

[55] http://www.adaderana.lk/news/42829/president-vows-to-protect-sri-lankas-military-commanders-war-heroes-

உடந்தையாக இருந்ததாக ஜயசூரியவை குற்றஞ்சாட்டி (பிரேஸிலுக்கும், சில வேறு லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குமான அப்போதைய தூதுவர்) பிரேஸிலிலும், கொலம்பியாவிலும் உள்ள மனித உரிமைகள் குழுவொன்றினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கான பதிலிறுப்பே இக் கருத்துக்களாகும்.[56] தற்போது இயங்காத நிலையில் உள்ள எல்.ரி.ரி.ஈ.க்கான தொடர்புகளையும் அத்துடன் அதிலிருந்து நிதிப்படுத்தலையும் வலியுறுத்துவதன் மூலம் சிவில் சமூகத் தாபனங்களின் மதிப்பைக் குறைக்கும் பழைய தந்திரங்களைத் செயற்படுத்தி, அ.சா.தாபனங்களின் "சுருதிக்கு நடனமாட முடியாது" என அதே உரையில் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இந்த இரு சம்பவங்களைத் தொடர்ந்து, "வெளிநாட்டு நன்கொடையாளர்களினதும், மோசடிக்காரர்களினதும் மீது தங்கியுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களை" ஜனாதிபதி சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் சகித்துக் கொள்ளமாட்டார்கள் என செப்ரெம்பரில் உள்ளூர் ஊடகங்களுக்கு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர கூறியுள்ளார். பொலிஸ் மா அதிபர் ஜயசுந்தர போன்ற வேறு அதிகாரிகளை எவ்வாறு உயர் அரசாங்க அரசியல்வாதிகளிடமிருந்து அடக்குமுறையிலான வாக்குவன்மை உற்சாகமூட்ட முடியும் என்பதை இக் கருத்துக்கள் சித்தரிக்கின்றன.[57]

மீண்டும் டிசம்பர் 19 அன்று கொழும்பில் கலதாரி ஹொட்டேலில் நீதித்துறை அதிகாரிகளுடன் வருடாந்த மகாநாட்டில் நிகழ்த்திய உரையொன்றில், யுத்தத்திற்குப் பிந்திய பொறுப்புக்கூறல் நடைமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதற்கான தனது எதிர்ப்பினை சிறிசேன மீள்-வலியுறுத்தினார்.[58] "வெளிநாடுகளில் வாழும் சில எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களும், சில தாபனங்களினதும் அத்துடன் எல்.ரி.ரி.ஈ.உடன் இணைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உறுப்பினர்களுமே பலதரப்பட்ட அறிக்கைகளை இன்னுமே செய்கின்றனர் என்பதுடன், காரணத்தையும் (பொறுப்புக்கூறலில்) கைவிடவில்லை" என Daily FTக்கு சிறிசேன கூறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

### *30. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் மற்றும் LGBTIQ சமூகத்திற்கும் எதிராக முன்னாள் நீதி அமைச்சர் ராஜபக்ஷவின் கூற்றுக்கள்*

ஜூன் 22 அன்று வெளியிடப்பட்ட Ceylon Today உடனான நேர்முகங்காணலொன்றில், அப்போதைய நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ குறிப்பான உதாரணங்களை வழங்காமல் தொடர்ந்துமே நிதியைப் பெற்றுக்கொள்ளுமுகமாக நாட்டை நிலையற்றதாக்குவதற்கும் அத்துடன் இனவாத அதையின்மையைத் தூண்டுவதற்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டியிருந்தார்.[59] சிங்கள பௌத்த எதிர்ப்புப் பிரச்சாரத்தை சிறுபான்மை சார்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் பரப்புவதாக ராஜபக்ஷ குற்றஞ்சாட்டிய அதேவேளை அரச சார்பற்ற நிறுவன செயலார்வலர்களை நம்பிக்கைத் துரோகிகள் என நாமமிட்டார்.

ஜூன் 29 அன்று டெயிலி மிரரில் வெளியிடப்பட்ட ஒத்த நேர்காணலொன்றில் அதே வாக்குவன்மையின் அதிகளவை ராஜபக்ஷ மீட்டுரைத்ததுடன், அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்துவதற்கு கடுமையான சட்டவாக்கத்திற்கு அவர் அழைப்புவிடுத்தார். மூன்று வருடங்களுக்கு முன் இருந்து பாதுகாப்பு அமைச்சின் தீவிர கண்காணிப்பின் கீழ் உத்தியோகபூர்வ அரச சார்பற்ற நிறுவனச் செயலகம் உள்ள ஒரு நாட்டில் இது ஒரு கவலையூட்டும் கூற்றாகும்.[60] நேர்காணலில், "தேசிய அக்கறைக்கு பாரதூரமாக ஊறுவிளைவிக்கின்ற நோக்கங்களுடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றன" என ராஜபக்ஷ குற்றஞ்சாட்டினார்.

---

[56] http://www.aljazeera.com/amp/news/2017/08/brazil-lawsuit-accuses-jagath-jayasuriya-war-cimes-170829055025990.html
[57] http://www.dailymirror.lk/article/Prez-PM-won-t-tolerate-NGOs-surviving-on-foreign-aid-IGP-140297.html
[58] http://tamilguardian.com/content/sri-lankan-president-blames-ngos-calling-foreign-judges
[59] http://www.ceylontoday.lk/print20170401CT20170630.php?id=23826
[60] http://www.dailymirror.lk/article/Laws-needed-to-regulate-NGOs--131852.html

2017 ஓகஸ்டில் நீதி அமைச்சர் என்ற பதவிநிலையிலிருந்து ராஜபக்ஷ ராஜினாமா செய்தார். ஆனால், தான் பதவி நீக்கப்பட்டதாக அவர் பின்னர் வலியுறுத்தியிருந்தார்.[61] சீனாவுடனான ஹம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கை குறித்து அப்போதைய அமைச்சரின் விமர்சனத்திற்கு பதிலிறுப்பாக இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே, மனித உரிமைகள் காப்பாளர்களுக்கும் மற்றும் முஸ்லிம்கள் அத்துடன் LGBTIQ சமூகம் போன்ற சிறுபான்மை குழுக்களுக்கும் எதிரான அவரது கூற்றுகளுக்காக ராஜபக்ஷ ஒரு போதுமே உத்தியோகபூர்வரீதியில் கண்டிக்கப்படவில்லை.

ஜனவரி 22 அன்று, இலங்கையின் சட்டங்களின் கீழ் தமது ஆளடையாளத்தை வெளிப்படுத்துவதற்கு முடியாததும், அனேகமாக இரகசியமாகவும், அச்சத்துடனும் வாழ்கின்றதுமான இலங்கையின் பெண் தன்னினச்சேர்க்கையாளர், ஆண் தன்னினச்சேர்க்கையாளர், இரு பாலினச் சேர்க்கையாளர், மாற்று பாலினத்தவர், இரு பாலினத்தவர், விந்தையானதும், சந்தேகத்திலானதுமான [Lesbian, Gay, Bisexual, Transgender, Intersex, Queer and Questioning (LGBTIQ)] சமூகத்திற்கு எதிராக அடக்குமுறையிலான குறிப்புக்களை அப்போதைய அமைச்சர் ராஜபக்ஷ செய்தார்.[62] திஸ்ஸமஹராமையில் மாவட்ட நீதிமன்றமொன்றின் திறப்பு விழாவில் உரையாற்றுகையில், "அகௌரவத்தின் கலாசாரம்" ஒன்றாகவும், "உளவியல் சுகவீனம்" ஒன்றாகவும் தன்னினச்சேர்க்கை குறித்து அவர் குறிப்பிட்டார். சட்டத்தை உள்ளடக்கும் அமைச்சின் உயர் வரிசையிலான அமைச்சர் ஒருவரிலான இக் கருத்துக்கள் பாரதூரமான அடக்குமுறைக்கு முகங்கொடுக்கும் LGBTIQ குறித்து ஊக்கத்துடன் இயங்குகின்ற நாடொன்றில் ஆழமான கரிசனையைக் கொண்டுள்ளதாக விளங்குகின்றன.

---

[61] https://www.colombotelegraph.com/index.php/i-did-not-resign-i-was-sacked-double-doctor-wijeyadasa-rajapakshe/

[62] https://www.colombotelegraph.com/index.php/homophobic-justice-minister-wijeyadasa-should-resign-right-activists/